UNIVERSITY LIBRARY
23 JUL 2011
PERIODICALS DIVISION

02 - 93

23-07-2011
பக்கங்கள்: 24
விலை: 15/=

# Saturday மெயில்

සැටඩේ මේල්

*A Fascinating Weekly Bulletin*



# குளிருட்டி ஆடைகள்

அடுத்த பக்கம் புரட்டுங்கள்

Registered as a Newspaper at G.P.O.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தியக் கிராமத்தில் 108 இரட்டையர்கள்

ஒரு ஊரில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இருவர், இரட்டைக் குழந்தைகளாகப் பிறந்திருந்தாலே அவர்களைப் பார்த்து எல்லோரும் வியப்படைவர். ஆனால், உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள ஒரு கிராமத்தில் கடந்த 50 ஆண்டுகளில் 108 க்கும் மேற்பட்ட இரட்டையர்கள் பிறந்துள்ளனர். உத்தர பிரதேச் மாநிலம், அலகாபாத் அருகே உள்ள உம்ரி கிராமத்தில்தான் இந்த அதிசயம் நிகழ்ந்துள்ளது. இங்கு மனிதர்கள் மட்டும் இரட்டையர்களாகப் பிறக்கவில்லை.

கிராமத்தில் உள்ள விலங்கினங்களும் இரட்டைக் குட்டிகளை ஈன்றெடுக்கின்றன. இதற்கான காரணத்தைக் கண்டறிய, விஞ்ஞானிகள் மருத்துவ நிபுணர்களும் முயற்சி மேற்கொண்டும் பலனில்லை. ஐதராபாத், டில்லி, கொல்கத்தா, சென்னை மற்றும் மும்பை உட்பட நாட்டின் முக்கிய நகரங்களில் இருந்து விஞ்ஞானிகள், மருத்துவ நிபுணர்கள் பலரும் சமீப காலங்களில் உம்ரி கிராமத்திற்குச் சென்று, சோதனை மேற்கொண்டுள்ளனர். எனினும் உரிய காரணத்தை அவர்களால் கண்டறிய முடியவில்லை.



உம்ரி கிராமத்தைச் சேர்ந்த இரட்டையர்களில் ஒருவரான குடு என்ற சிறுவன் கூறுகையில்;

'தற்போது கிராமத்தில் உள்ள இரட்டையர்களில் 16 ஜோடி இரட்டையர்கள் மட்டுமே ஒரே மாதிரியாக இருப்பர். அவர்களில் ஒருவரை ஒருவர் அடையாளம் காண்பது கடினம்' என்றான். குடுவின் தாத்தா கூறுகையில்; '80 ஆண்டுகளுக்கு முன் கிராமம் முழுவதும் இரட்டைக் குழந்தைகள் அதிகளவு நிறைந்திருந்தன' என்றார். இவ்வகையில் கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் தங்கள் ஊரின் பெயரைப் பதிவு செய்வது என உம்ரி கிராம மக்கள் முடிவு செய்துள்ளனர்.

# மயக்க மருந்தின்றி சத்திர சிகிச்சை



மருத்துவ உலகில் சாதனைகள் தொடர்கதையாக இருக்கிறது. ஒவ்வொரு நாளும் ஒரு சாதனை படைக்கப்படுகிறது. அந்த வரிசையில் இப்போது மயக்க மருந்து கொடுக்காமல் சத்திர சிகிச்சை மேற்கொள்வது குறித்த ஆய்வில் வெற்றி கிட்டியுள்ளது.நோயாளிகளை இயல்பு நிலையில் வைத்து, அவர்களின் சிந்தனைகளை சிதறடித்து கவனத்தை மாற்றி சத்திர சிகிச்சை செய்யும் புதிய முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.இது பரிசோதனை அடிப்படையில் வெற்றி கிடைத்துள்ளது என்கின்றனர் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள்.பெரும்பாலும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இந்த முறை பெரிதும் உதவும் என்பதும் மருத்துவ தரப்பின் கணிப்பு. இந்த முறை விர்சுவல் ரியாலிட்டி தெரபி எனப்படும்.

அமெரிக்காவின் வாஷிங்டன் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களின் புதிய கண்டுபிடிப்பு இது, புதிய முறை குறித்து ஆராய்ச்சியாளர்கள் கூறியதாவது; இந்த முறையில் நோயாளிகளின் முகத்தில் கண்கள் விளையாட்டை மட்டுமே பார்க்கக் கூடிய வகையில் முகமூடி போன்ற சாதனம் பொருத்தப்படும். வீடியோ கேம் விளையாடத் தெரியாதவர்களும் இதை எளிதாக கையாள முடியும். இதன் மவுஸ் அவர்கள் கையில் இருக்கும். முதலில் அவர்கள் கவனம் முழுவதும் விளையாட்டில் செலுத்தப்படும். ஒரு கட்டத்தில் அவர்கள் விளையாட்டில் ஊன்றிவிடுவர். ஸ்னோ வேர்ல்ட் என்ற பெயரில் லோ இம்மர்ஷன், ஹை இம்மர்ஷன் என 2 வகை விளையாட்டுகள் உள்ளன. இந்த முறையில் சத்திர சிகிச்சை தன்மைக்கு ஏற்ப நோயாளிகளுக்கு வீடியோ விளையாட்டுகள் நிர்ணயிக்கப்படும்.

இந்த சத்திர சிகிச்சைக்கு 60 வயதை கடந்த 25 பேர் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டனர்.இந்த முறையில் மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சையால் தங்களுக்கு வலி இல்லை என்றே அவர்கள் தெரிவித்தனர். விர்சுவல் ரியாலிடி என்ற தெரபி முறையில் நோயாளிகளுக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படும்போது மயக்க மருந்து கொடுக்கப்படுவதில்லை. அவர்களுக்கு வலி தெரியாமல் இருக்க புதிய முறையில் அவர்களின் கவனம் வேறு செயல்களில் திருப்பப்படும். உதாரணமாக அவர்களை வீடியோ கேம் விளையாட வைத்து அதில் அவர்கள் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபடும்போது சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படும்.வலியை அவர்கள் உணர்வதில்லை. சத்திர சிகிச்சை செய்யும் நேரமும் மிகவும் குறைவு என்கிறார் ஆராய்ச்சி குழுவைச் சேர்ந்த

## குளிரூட்டி...

எப்பொழுதுமே உடலை குளிர்ச்சியாக வைத்திருக்கும் குளிரூட்டி சட்டையை ஜப்பான் நிறுவனம் தயாரித்துள்ளது. அலுவலகம் மற்றும் வீட்டில் குளிரூட்டியில் இருந்தே பழக்கப்பட்டவர்கள் வெளியே வெயிலில் செல்லும் போது மிகவும் சிரமப்படுவர். வெயிலின் தாக்கம் அவர்களைக் கடுமையாகப் பாதிக்கும். அப்படிப்பட்ட நபர்களுக்கும் வெயிலில் நின்று வேலை செய்பவர்களுக்கும் வரப்பிரசாதமாக குளிரூட்டி சட்டை தயாரிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானைச் சேர்ந்த 'குச்சோபுடு' என்னும் அந்த நிறுவனம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு இச்சட்டையைத் தயாரித்துள்ளது. மழைக் கோட்டு போன்ற வடிவத்தில் தயாரிக்கப்பட்டுள்ள இந்தச் சட்டையில் உள்ள பகுதியில் இரு மின்சார விசிறிகள் பொருத்தப்பட்டிருக்கும். அவை உயர் சக்தி கொண்ட பற்றறிகளுடன் இணைக்கப்பட்டு இருக்கும்.இந்த பற்றறிகளை ஒரு முறை சார்ஜ் செய்தால் 11 மணிநேரம் தாக்குப்பிடிக்கும்.

பற்றறிகள் மூலம் இயங்கும் மின்சார விசிறிகள் ஒரு நிமிடத்துக்கு 20 லீற்றர் காற்றை உற்பத்தி செய்து சட்டையின் உட்பகுதி முழுவதும் பரவச் செய்கிறது.

இந்தக் காற்று உடனுக்குடன் சட்டையின் கழுத்துப்பகுதி மற்றும் கையின் மணிக்கட்டு வழியே வெளியேற்றப்படுகிறது. இதனால் உள்ளே சுழலும் காற்று சூடாகாமல் பார்த்துக் கொள்ளப்படுகிறது. குளிர்த்தன்மை அப்படியே பராமரிக்கப்படுகிறது.

இந்தச் சட்டையை அணிந்து கொண்டால் குளிரூட்டியில் இருப்பது போன்ற உணர்வு ஏற்படும். தொடர்ந்து 11 மணிநேரம் பயன்படுத்த முடியும். மற்ற குளிரூட்டிகளுடன் ஒப்பிடும் போது இதை இயக்கச் செய்ய ஆகும் செலவு குறைவு.

தனிநபர் குளிரூட்டி என்று பெயரிடப்பட்டுள்ள இந்தச் சட்டையின் விலை குறைந்தபட்சம் 87 பவுண்ஸ்கள் ஆகும். இதைவிட அதிகமான விலைக்கும் சட்டைகள் உள்ளன.

இந்தச் சட்டைக்கு ஜப்பானில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.இதன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேலும் பல நிறுவனங்களை குளிரூட்டி சட்டை தயாரிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

230711-1 mail 2

# வெளிநாட்டுக் காசு படுத்தும்பாடு

அங்கோ அவன் அரை நேரச்சாப்பாடு. இங்கோ இவர்கள் தொலைபேசியில் ஹலோ என்றவுடன் கிலோ கணக்கில் வருகிறது. வெளிநாட்டுப்பணம்.பின்பு என்ன குறைச்சல் நமது உறவுகளுக்கு. குடும்பத்தில் ஒருவர் வெளிநாட்டில் இருக்கிறார் எனின் இங்கு மற்றவர்கள் உழைப்பதை மறந்துவிடுகிறார்கள்.

ஒரு தாய் தன் மகனை பார்க்க சென்று வந்து கூறினாள்.அங்கு அவன் சிறிது நேரம் கூட வீட்டில் இருக்க நேரமில்லை.இரவு பகலாய் உழைக்கிறான்.அவன் வெளியில் உடுக்கும் உடையைத்தான் நாம் இங்கு வீட்டிலே உடுத்துகின்றோம் என்று.என்னடா அவர் உடுத்தும் உடையை இவர்கள் வீட்டிலே உடுத்துகிறார்களா என யோசித்தேன்.

அவர் மேலும் கூறினார்.நாம் வீட்டிலே போடும் உடைகள் மாதிரித்தான் அவன் அங்கு வெளியில் உடுத்துகிறான் என்றார்.அதுதான் உண்மை. அங்கு அவர்கள் இரவு பகல் பாராது எத்தனையோ வீட்டு வேலைகள் செய்கிறார்கள்.அது மட்டுமா, வீட்டுக்கு கல் தூக்குவது போல எத்தனையோ கூலி வேலை மாதிரி அங்கு கிடந்து கஷ்ரப்பட்டு அவர்கள் அனுப்பும் பணம் பற்றி இவர்கள் சிந்திப்பது இல்லை.அண்ணா டொலராய் பவுண்ஸாய் அனுப்புகிறார் நமக்கென்ன என்று சிந்திக்கிறார்கள்.

அது மட்டுமா?சில பெற்றோரே 'எடே தம்பி இங்கை பக்கத்து வீட்டு பையன் மோட்டார் சைக்கிள் வாங்கி ஓட்டுறான்.இங்கை உன்ரை தம்பியும் நெடுக கேட்டபடி. அடுத்த முறை காசு அனுப்பேக்க கூட அனுப்பிறியே'. இது ஒரு அம்மா கேட்கும் கேள்வி.

இங்கு இருப்பவனை ஒரு வேலைக்கு அனுப்பி சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணத்திலும், அண்ணன் வெளிநாட்டில் இருக்கும்போது தம்பிக்கு மோட்டார் சைக்கிள் இல்லை என்றால் மரியாதை இல்லை என்று சிந்திப்பவர்கள் தான் அதிகம்.இதனால் வேலை பற்றியோ தாம் உழைக்க வேண்டும் என்ற சிந்தனையோ அவர்களுக்கு எவ்வாறு ஏற்படும்.

தமது பிள்ளைகள் தம் காலத்தை வீணாக்குவதற்கு சில பெற்றோர்களே காரணமாகின்றனர்.அவனுக்கு அண்ணன் இருக்கிறான் தானே என்று சிந்திப்பவர்கள், அவனது எதிர்காலத்திற்கு ஒரு தொழில் வேண்டும். அதற்காக அவனுக்கு ஒரு சுய தொழிலையாவது உருவாக்கிக் கொடுப்போம் என்று சிந்திப்பதாய் இல்லை.

வேலை இன்றி இருப்பவனிடம் பல ஆயிரம்ரூபா பெறுமதியான செல்போன் கைவசம்.வேலை செய்ய வேண்டிய அவசியம் இல்லை.தெருவிலே நின்று போவோர் வருவோரை அந்த செல்போனில் படம் எடுப்பது தான் வேலை.இப்படி இருந்தால் எம் நாடு எப்படி உருப்படும்.

அடுத்து அன்று ஒரு இணையத்தளத்திலே பார்த்தேன்,பக்கத்து வீட்டுப்பிள்ளை மோட்டார் சைக்கிள் வாங்கியதைப் பார்த்து இந்த வீட்டு அம்மா தன் மகனிடம் கேட்கிறாள். உன்ர தங்கச்சிக்கும் ஒரு மோட்டார் சைக்கிள் எடுத்துக் கொடு.

பக்கத்து வீட்டுப்பிள்ளை பல்கலைக்கழகம் போகிறாள்.மோட்டார் சைக்கிளில் இந்த வீட்டுப்பிள்ளை 8 ஆம் வகுப்பே தாண்டவில்லை.இங்கு தன் பிள்ளைக்கு தானே மோட்டார் சைக்கிள் எடுத்துக் கொடுத்து ஊர் சுற்ற அனுப்பும் இந்தத் தாய் தம் பிள்ளையையும் மற்றவர்கள் மாதிரி இருக்க வேண்டும் என்று சிந்திக்கிறார்கள்.நல்ல நிலையிலே வாழ்வதற்கு வழிகாட்டுபவையைத் தெரிவு செய்து அதனை உதாரணமாக காட்ட முற்பட வேண்டும்.

இன்று பாடசாலையில் கல்வி கற்பவர்களிடம் செல்போன் இருக்கிறது.8 முதல் 80 வரை செல்போன் கையில் வைத்து பாவிக்கின்றனர்.தமது சொந்த பாவனையில் வைத்திருக்கிறார்கள்.சிறுவர் கூட செல்போனை கையாளத் தெரிந்தவர்களாகவே இருக்கின்றார்கள்.ஒரு வீட்டிலே கிட்டத்தட்ட இரண்டு அல்லது மூன்று செல்போன்கள் இருக்கும்.

அதனால் சேவைகள் இலகுவாக்கப்பட்டு வந்தன.அன்று பக்கத்து வீட்டு பரிமளம் அக்காவுக்கு இந்த வீட்டு அம்மா போன் எடுக்கிறா.என்ன விடயம் என்று பார்த்தால் பருப்பு அவியலை.அதற்கு என்ன செய்யலாம் என்று கேட்பதற்கு.செல்போனில் செய்தி செல்கிறது நம்ம நாட்டு தொழில்நுட்ப வளர்ச்சி இவ்வாறெல்லாம் முன்னேறியுள்ளது.

பாடசாலைக்கு சிலர் செல்போன் கொண்டு செல்கிறார்கள்.தனியார் கல்வி நிலையத்திற்கும் கொண்டு செல்கிறார்கள்.பிள்ளை போனுக்கு காசு முடிந்தது என்று கேட்டவுடன் பெற்றோர் காசு வழங்குகின்றார்கள்.எவ்வாறு காசு முடிந்தது என்று கேட்டதாய் இல்லை.இது செல்போனை வைத்து என்ன எல்லாம் பாடுபடுத்துமோ யாரறிவார்?

தம்முடன் கல்வி கற்கும் பிள்ளைகளை படம் எடுப்பது,செல்போன் வழியில் இணையத்தளத்தில் இருந்து படங்களை இறக்குவது, ஆபாசப்படங்களை பார்ப்பது இவ்வாறு சீரற்ற விடயங்களில் ஈடுபடுகிறார்கள்.இதற்குக் காரணம் யார்?

இன்று பேஸ்புக் பாவனை அதிகரித்துக் காணப்படுகிறது.கூடுதலான வீடுகளில் கம்பியூட்டர்,லப்டொப்,செல்போன் இவற்றில் பேஸ்புக்கை பார்க்கும் வசதி இருக்கிறது.அதனால் காலை முதல் மாலை வரை கூடுதலானோர் தவறாது செய்யும் காரியம் பேஸ்புக் பாவனையாக காணப்படுகின்றது.வேலைக்குச் செல்லவேண்டிய அவசியம் அற்றோர் பல பேர் இருக்கிறார்கள்.அவர்கள் பொழுது இதிலேயே வீணடிக்கப்படுகிறது.

தமக்கு தெரிந்த நண்பர்கள், தெரியாத நண்பர்கள் என்று பலரை இணைத்து அவர்களுடன் அலட்டுதல் *(chatting)* செய்வதற்கு காத்திருக்கும் ஒரு குழுவினர்.இதன் விளைவுகள் பல.தெரியாத பலருடன் நட்புக் கொண்டு அதன் மேல் காதலாகி பின்பு அதன் இறுக்கத்தின் விளைவாக தந்தை தாய் பெயர் தெரியாத அநாதைக் குழந்தை குப்பைத் தொட்டியிலே.இதுதான் இன்று காணப்படுகின்ற நாகரிக வளர்ச்சியா?

கோவில்கள்,திருவிழாவின்போது செய்யும் விடயங்கள் எண்ணில் அடங்காதவை.கோவிலில் வீடியோக்கள்,போட்டோக்கள் என ஒரே அமளி. அடடா வீடியோ எடுப்பினமே அதற்கேற்றவாறு தானே நாம் உடையணிய வேண்டும் என்று உடையைத் தேடி எடுத்து அலங்காரம் செய்து வர கோவிலில் சுவாமி வீதிவலம் வரும் காட்சியைத்தான் அவர்கள் பார்க்கக் கூடியதாக இருக்கும்.

இவ்வாறான விடயங்களால் பக்தியாக கோவிலுக்கு வருபவர்கள் கூட எங்கே எம்மைப் பார்த்து மற்றவர்கள் என்ன கதைப்பார்களோ என்று பகட்டான உடைகளைத் தேர்ந்தெடுத்து உடுத்தி அதில் ஏதாவது அழுக்குகள் பிரளாமல் பார்க்க நேரம் போதும் என்றாகிவிடும்.

இதில் எங்கே கடவுளைப் பார்க்க நேரம்.நான் மட்டுமா?என்னை விட யார் அழகாக உடை உடுத்து வந்துள்ளார்கள் என்று அவர்களை மதிப்பீடு செய்யவே அவர்களுக்கு நேரம் போதும் என்றாகிவிடும்.கோவிலுக்கு வருபவர்கள் எல்லோரும் கும்பிடும் நோக்கத்துடனா வருகிறார்கள்?



தற்போது பத்திரிகையில் வரும் மரண அறிவித்தல்களை எடுத்துப் பார்த்தால் ஒரு பக்கம் அதற்காக ஒதுக்கிவிடுவார்கள்.ஒரு சிலர் பத்துப் பிள்ளைகளும் வெளிநாடு அவர்கள் பெயரும் அதன் பக்கத்தில் அவர்களுக்கு பட்டம் வழங்குவது போல் அடைப்புக்குறிக்குள் அவர்களது நாடு பெயர் இவற்றையெல்லாம் போட்டு போட ஒரு பக்கம்.

இதனைப் பார்ப்பவர்கள் இது ஒரு பக்கத்தில் வந்திருக்கு.பக்குவப்படுத்தி வைப்போம் என்றா சிந்திக்கப் போகிறார்கள்?ஒரு நாளும் இல்லை.பணம் இருக்கு.எமது வசதியைக் காட்டுவோம் என்று எதற்கு என்னத்தை செய்வது என தலைகால் புரியாது நடந்து கொள்கிறார்கள்.

வீதியிலே போகும்போது பார்த்தேன்.பெரியளவில் ஒரு பனர் கட்டப்பட்டிருந்தது.ஏதோ விழாவிற்கான அழைப்பு என்று சிந்தித்து மெதுவாக வாகனத்தைச் செலுத்தி வாசித்த போது தான் பார்த்தேன்.அது ஒரு கண்ணீர் அஞ்சலி.வெளிநாட்டுப் பணம் படுத்தும் பாடு தான் என்ன?

பத்திரிகையிலே பிறந்தநாள் வாழ்த்தும் வரும்.தந்தைக்கு மகள் வாழ்த்து தெரிவிப்பார்.மகளுக்கு தந்தை தெரிவிப்பார்.இது எல்லாம் அவர்கள் வீட்டிலே வாழ்த்தினால் போதாதா?பத்திரிகையில் போட்டால் தான் வாழ்த்துப் போய்ச் சேரும் என்று ஏதாவது விதிமுறை இருக்கின்றதா?தன் பிள்ளைகள் தன் குடும்பத்தினரிடையே வாழ்த்த அவர்களுக்கு பத்திரிகை தூதாக செயற்படுகின்றது.

ஒருவர் இறந்தால் அதனை துக்கவீடாக முன்னர் நடத்துவார்கள்.நான் அண்மையில் ஒரு மரண வீட்டிற்கு சென்றிருந்தேன்.இறந்தவரின் தலைப்பக்கத்தில் சிறிய கதிரையில் ஏதோ வைக்கப்பட்டிருந்தது.முன்னர் குத்து விளக்கு ஏற்றித்தான் நான் கண்டிருக்கின்றேன். இது என்ன ஏதோ தெரிகிறது என்று போய்ப் பார்த்தால் லப்டொப் வைக்கப்பட்டிருக்கு. ஏன் இதை வைத்திருக்கிறார்கள் என்று பார்த்தால் பிள்ளைகள் வெளிநாட்டிலே.இங்கு வர கஷ்டம்தானே. அதுதான் தாயாரின் மரண வீட்டை நேரடியாக ஸ்கைப்பில் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.சரி என்ன நடக்கிறது என்று பார்த்தால் கிரியை செய்ய ஐயர் வந்திருக்கிறார். அவருக்கு முன்னாடியும் லப்டொப் நடனமாடுகின்றது.

ஐயருக்கும் லப்டொப்பைப் பார்த்து கிரியையைச் செய்வதற்கு தடுமாற்றம்.பெற்றோருக்கான கடமையைச் செய்ய யாரும் இல்லை.அதனை நேரடியாகப்பார்த்து துக்கத்தில் பங்கு கொள்கிறார்களாம். அட கோவிலில் மட்டும்தான் திருவிழாவை நேரடியாக ஒளிபரப்பு செய்ய முடியுமா?

முன்னர் திருமண வீடு என்றால் எழுத்து. அதாவது பதிவுத் திருமணம் முதலிலே நடந்து விடும்.பின்பு திருமணம்.ஆனால் இப்போது அப்படியில்லை.பதிவுத்திருமணம் திருமணத்தன்றே பின்னேரம் நடைபெறும்.திருமணத்தின்போது பல ஏற்பாடுகள். பின்னேரம் கூறை மாற்றி பதிவுத் திருமணத்திற்கு வேறு உடை மாற்றி அதற்கேற்ற நிறத்திலே கேக் வெட்டினார்கள்.என்னடா இவ்வளவு பெரிதாய் கேக் இருக்கிறது என்று பார்த்தால் அது கேக் அல்ல. வெறும் ரெஜிபோம். அதற்கு அவர்கள் செலுத்தும் பணம் ஆறு ஆயிரத்திற்கும் மேல் பெறுமதி.

அதனை பதிவுத் திருமணம் முடிந்த உடனே திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற ஒப்பந்தம் வேறு.மறுநாள் மணமகன் வீட்டிலே வரவேற்பு நிகழ்ந்தது.அங்கேயும் ஒரு கேக்(றெஜிபோம்)காத்திருக்கும்.சரி,இத்துடன் முடிந்துவிட்டதா என்று பார்த்தால் இல்லை.மறுநாள் மணமகள் வீட்டிலே வரவேற்பு நிகழ்வு. அங்கேயும் அவர்கள் சேலைக்கு ஏற்ற நிறத்தில் அதில் வேறு வித கேக்.ஒரு ஐந்து நிமிடம் தான் அதை வைத்து படம் எடுத்தார்கள்.அதற்காக அவர்கள் செலவிடும் பணத்தைப் பற்றி யாரும் சிந்திப்பதாய் இல்லை.

இன்று பிள்ளைகளுக்கு பெற்றோர் தாராளமாய் பணத்தை வழங்குகிறார்கள்.இவர்கள் இதை வைத்து என்ன செய்கிறார்கள் என கேட்க யாரும் இல்லை.தமக்குப் பணம் இருக்கு. அதனைக் கொண்டு பார்க்,பீச் என்று சுற்றுகிறார்கள்.பெற்றோரும் அவர்கள் எங்கு போகிறார்கள்,வருகிறார்கள் என்று சிந்திப்பதாய் இல்லை.இதனால் கல்வியை கைவிட்டு காதலில் ஈடுபடுகிறார்கள்.தமக்காக வீட்டிலே வாங்கி வைத்த நகைகளுடன் காதலனுடன் ஓடுகிறார்கள்.

அவற்றை வைத்து உண்ணுகிறார்கள்.அவை முடிந்தவுடன் காதலனால் கைவிடப்பட்ட நிலையில், தற்கொலையை நாடுகிறார்கள்.அல்லது தம் வயிற்றில் பிள்ளைகளைச் சுமந்து கொண்டு தம் வாழ்க்கையை நிர்ணயிக்க முடியாது அல்லற்படுகிறார்கள்.வசதிகள் கூடும் போது கல்வியில் வீழ்ச்சி ஏற்படுகின்றது.நாம் படிப்பது இந்தப் பணத்திற்காகத்தானே. எம்மிடம் தான் இந்தப் பணம் இருக்கின்றதே பின்பு ஏன் நாம் படிப்பான் என்ற யோசனை ஏற்படுகின்றது.

அதனால் கல்வியில் அக்கறை இல்லாமல் காணப்படுகிறார்கள்.பணம் பத்தும் செய்யும் என்பார்கள்.இப்போது இங்கு பணம் என்ன எல்லாம் செய்கிறது.அதனால்தான் முன்னர் கூறியிருக்கிறார்கள் போல 'ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு' என்று.

**சுபா, மானிப்பாய்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறட்சியின் கோரப்பிடியில் கிழக்காபிரிக்கா

சூழல் வெப்பநிலை விரைவாக அதிகரித்துச் செல்வதானது உலகளாவியரீதியில் பல்வேறு சூழல் பிரச்சினைகளை ஏற்படுத்திவரும் நிலையில் தற்போது அதிகளவான நாடுகளைப் பாதித்துள்ள இயற்கை அனர்த்தமாக வறட்சியை குறிப்பிடலாம்.


குறித்ததோர் பிரதேசத்தில் மிக நீண்டகாலத்திற்கு மழை பெய்யாது இருப்பின் அங்குள்ள நீரூற்றுக்கள் யாவும் வற்றிவிடும். இதனால் அங்கு வறட்சி ஏற்படுகிறது. இந்நிலைமை தொடர்ந்தும் நீடிக்குமாயின் அங்கு மோசமான பொருளாதாரச் சிதைவு ஏற்பட்டு பட்டினி, பஞ்சம் போன்றவை ஏற்பட வழிகோலுகின்றது.

அந்தவகையில் கடந்த ஆண்டானது உலகின் அதிமிகு வெப்ப ஆண்டாக ஐ.நா.அமையத்தினால் பிரகடனப்படுத்தப் பட்டிருந்த போதிலும் இந்த ஆண்டிலும் அதிகரித்த வெப்பத்தின் தாக்கத்தினை நாம் உணர்கின்றோம்.

அதிகரித்துச் செல்லும் வெப்பநிலையினால் பல நாடுகளில் வறட்சி ஏற்பட்டுள்ள போதிலும் அது இருண்ட கண்டமான ஆபிரிக்காவின் பல பகுதிகளை மிகமோசமாகத் தாக்கிவருகின்றது. குறிப்பாக சோமாலியா, எதியோப்பியா, கென்யா ஆகியநாடுகளை உள்ளடக்கியதான கிழக்காபிரிக்க முனைப்பகுதி மற்றும் சாஹெல் நாடுகள் என்பனவற்றில் தற்போது மோசமான வறட்சி நிலவுவதுடன் அங்கு பல இலட்சக் கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த நாடுகளின் பொருளாதார செயற்பாடுகளும் சீர்குலைத்துள்ளன.

புவியின் உயிரினங்கள் தோன்றிய காலத்திலிருந்து அவை வறட்சியால் பாதிக்கப்பட்டு வந்தமைக்கான சான்றுகளை நாம் அறியக்கூடியதாக உள்ளது. எனினும் தற்போது வறட்சி ஏற்படும் அளவும் அதனால் பாதிக்கப்படும் நாடுகளின் தொகையும் அதிகரித்துச் செல்கின்றன.

கிழக்காபிரிக்கப் பகுதியில் 60 வருடகாலமாக மழை வீழ்ச்சி இன்மையால் அங்கு மோசமான வறட்சி ஏற்பட்டுள்ளது. இதனால் பலகோடிக் கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். எனினும் தற்போது அங்கு மிக மோசமான வறட்சி ஏற்பட்டுள்ளதால் பல



இலட்சக்கணக்கானோர் உணவின்றித் தவிப்பதுடன் அகதிமுகாம்களில் தஞ்சமடைய வேண்டிய நிலைக்கு தள்ளப் பட்டுள்ளனர்.

வறட்சியால் வாடுபவர்களுக்காக கென்யாவின் சோமாலிய எல்லைப்பகுதியருகே தடாப் எனும் பிரதேசத்தில் உலகின் மிகப் பெரியதாக கருதப்படும் அகதிமுகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதில் 80,000 பேர்வரை வாழ்வதற்கான வசதிகள் உள்ள போதிலும் 3 1/2 இலட்சத்திற்கும் அதிகமானோர் அங்கு தஞ்சமடைந்துள்ளதால் அங்கு பல நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளது.

அங்கு போதியளவான மழை வீழ்ச்சி கிடைக்காததினால் விவசாயச் செய்கை மற்றும் கால்நடைவளர்ப்பு என்பன மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் 1 கோடிக்கும் அதிகமானோர் போதியளவான உணவின்றி பட்டினியால் வாடுகின்றனர். உணவுப் பொருட்களுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் உணவின் விலை மிகதுரிதமாக அதிகரித்துள்ளது. இதனால் பிராந்திய மோதல்களும் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தடாப் முகாமில் ஏற்கனவே 3 1/2 இலட்சத்திற்கும் அதிகமானோர் தஞ்சமடைந்துள்ள நிலையில் முகாமிற்கு வெளியே பல்லாயிரக்கணக்கானோர் ஒருவேளை உணவிற்காக காத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

சோமாலியா, கென்யா, எதியோப்பியா ஆகிய நாடுகளில் வாழும் சிறுவர்களில் 30 சதவீதத்திற்கும் மேற்பட்டவர்கள் போதியளவான உணவின்மை காரணமாக போசாக்குக் குறைபாட்டுக்கு உள்ளாகியுள்ளனர். அத்துடன் அங்கு 10,000 பேர்களில் தினமும் 4 சிறுவர்கள் போசாக்கு குறைபாட்டால் உயிரிழந்து வருவதாக ஐ.நா. அறிக்கைகள் மூலம் தெரியவந்துள்ளது.

கடந்த 10 ஆண்டுகளாக போதியளவான மழை பெய்யாததன் காரணமாக அங்கு பயிர்கள் காய்ந்து போயுள்ளதுடன், கால்நடைகளும் விரைவாக இறந்து செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் கிழக்காபிரிக்கப் பெண்கள் குடிநீருக்காக பலமைல் தூரம் செல்ல வேண்டியிருப்பதாகவும் அதனால் அவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இவற்றைக் கருத்திற் கொண்டு உணவின்றி உயிருக்குப் போராடும் 1 கோடி மக்களுக்கு உணவினை வழங்க ஐ.நா.அமைப்பு மற்றும் அமெரிக்கா, கனடா போன்ற நாடுகள் முன்வந்துள்ளன.

எவ்வாறெனினும் குறித்த நாடுகளால் வழங்கப்படும் உதவிகள் எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும் என்பதனை திடமாகக் கூற முடியாதுள்ளது. எனவே சூழலினை கருத்திற் கொண்டு அதற்கு இயைபாக வாழ்வதன் மூலம் வறட்சி போன்ற சூழல் நெருக்கடிகளை தவிர்த்துக் கொள்ள முடியும்.

த.கஜலக்ஷ்மி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எயிட்ஸ் விழிப்புணர்வு பெறுமா இலங்கை?



எமது நாட்டில் மட்டுமன்றி,உலகளாவிய ரீதியில் அரச,தனியார் நிறுவனங்களில் தொழில் புரியும் ஊழியர்களில் பெரும்பாலானோர் உளவியல் மட்டுமன்றி, உடலியல் பிரச்சினைக்கும் உள்ளாகின்றனர்.

இதிலும் விசேடமாக தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள ஆண்களே பெருமளவு எச்.ஐ.வி. எயிட்ஸ் *(HIV/AIDS)* நோயினால் பாதிக்கப்படுவதாக சர்வதேச தொழிலாளர் அமைப்புத் தெரிவித்துள்ளது.

இலங்கையில் இந்நோய் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவும் தொழிலாளர்களைப் பாதுகாக்கும் முகமாகவும் அவர்களின் நன்மைகருதி தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சினால் கடந்த திங்கட்கிழமை எச்.ஐ.வி. எயிட்ஸ் தொடர்பான தேசிய கொள்கை அடங்கிய நூல் வெளியிடப்பட்டுள்ளது.

வேலைத்தளத்தில் எச்.ஐ.வி.மற்றும் எயிட்ஸ் தடுப்புக்கும் மருத்துவ உதவிக்கும் பராமரிப்புக்கும் வழிகாட்டியாக இந்த எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் கொள்கை அமையுமெனவும் அரச தனியார் முறைசாராத் தளங்களில் உள்ள வேலையாட்களின் உரிமைகளை சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் கோட்பாடுகளுடன் சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் சிபாரிசுகளை கடைப்பிடிக்க உதவுமெனவும் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

அத்தோடு, புரிந்துணர்வு கோட்பாடுகளானது வேலைத்தளத்தில் கடைப்பிடிக்க உதவும். இந்தக் கொள்கையானது இழிவாக நடத்தப்படாத சூழலொன்றின் அடிப்படை உரிமைகள் முதலிடம் எடுக்கும் நியாயமான தொழில்வாய்ப்புகளைக் கொண்டதாக இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் திட்டங்களுக்கு உள்ளடக்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் கூறினார்.

இதேவேளை, தென்கிழக்காசிய நாடுகளில் மிகவும் குறைவாக எயிட்ஸ் தொற்றுள்ள நாடாக இலங்கை வகைப்படுத்தப்பட்டுள்ளதாக எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸுக்கான ஐக்கிய நாடுகளின் இணை வேலைத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மதிப்பீட்டிற்கமைய இலங்கையில் 2007 ஆம் ஆண்டில் 4 ஆயிரம் பேர் எச்.ஐ.வி. தொற்றுள்ளோராக இனங்காணப்பட்டனர். இதில் (15-49) தொழில் வயதுக்குட்பட்டவர்களே பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர். 2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாத அறிக்கையின்படி மொத்தமாக 1196 நோயாளிகள் தேசிய பாலுறவுகள்/எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்டத்திற்கு வருகை தந்துள்ளனர். தொற்றின் 82.8 வீதமானோர் ஆண்-பெண் உடலுறவின் மூலமும் 11.2 வீதமானோர் ஆண்களுக்கிடையேயான பாதுகாப்பற்ற உடலுறவின் மூலமும் இடம் பெற்றுள்ளது. தொழில் துறையினரிடையே தற்போது எச்.ஐ.வி. தொற்றுள்ள ஆண்,பெண் விகிதம் 4:1 ஆகக் காணப்படுவதாக சுகாதார அமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் தொற்றுக்கு உள்ளானவர்களை சமூகத்தில் இருந்து ஒதுக்கி வைக்காமலும் இழிவாக நடத்தாமல் பால் நிலை சமத்துவத்தோடு ஆரோக்கியமானதும் பாதுகாப்பான தொழில்சூழலை ஏனைய ஊழியர்கள் ஏற்படுத்த வேண்டும்.

அத்தோடு பாதிக்கப்பட்டோருக்கு ஏற்பட்டுள்ள நோயினை ஏனையோருக்குக் கூறி இழிவுபடுத்தாமல் இரகசியத்தன்மையோடும் அவர்களோடு சமூக விடயங்களை கலந்துரையாடியும் தொழிற்றுறையில் அவர்கள் வகிக்கும் பதவிக்கேற்ற தகுதியையும் மரியாதையையும் ஏனையோருக்கு போல் வழங்கும் மனோநிலையை வியாபார நிறுவனங்களில் தொழில்புரிவோர் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

இதேவேளை, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குச் சென்ற ஒருவர் எச்.ஐ.வி. எயிட்ஸ் நோய்க்குள்ளாக்கப்பட்டமை தொடர்பில் கூறுகையில்;

'1996 ஆம் ஆண்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பொன்றில் இணைந்தேன். மத்திய கிழக்கு நாடொன்றில் போதிய சம்பளத்துடன் எனக்கு வேலை கிடைத்து. நானும் முதலாளிக்கு விசுவாசமான முறையில் எனது வேலைகளைச் செய்வேன்.

சிறிது காலம் கழிந்த பின்னர் நீரிழிவு,மூட்டுவலி உள்ளிட்ட சில நோய்கள் எனக்கு ஏற்பட்டன. இருந்தும் நான் வேலை செய்வதை விடவில்லை. நோய்களுடன் வேலை செய்தேன். காரணம் நான் தொழிலின்றி நோயுடன் இருந்தால் இலங்கையில் எனது குடும்பம் பட்டினியில் இருக்க வேண்டி வரும்.

விடுமுறை நாளொன்றில் அங்குள்ள வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றேன். வைத்தியர்கள் எனக்குப் பல பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு எழுதித்தந்தனர். உடனே இரத்தம்,சிறுநீர் பரிசோதனைகளை மேற்கொண்டேன். டாக்டர் பரிசோதனையைப் பார்த்து விட்டு உடனே வைத்தியசாலையில் நிற்குமாறும் பல சிகிச்சைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் சொன்னார்கள்.

நான் முடியாது.முதலாளியிடம் கேட்டு வருகிறேன் என்று தொழில் புரியும் இடத்திற்குச் சென்று கேட்டபோது, அவர் சம்மதித்து எனது தொழில் சம்பளத்தை கழித்தார். நான் வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெறச் சென்றேன்.

நான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது வைத்திய நிபுணர்கள் என்னிடம் வந்து நான் வேலை செய்யும் இடம், எனது பெயர், சொந்த ஊர், தொழிற்சாலை பற்றி எழுதிச் சென்றனர். நானும் சிகிச்சை முடிந்த பின் அலுவலகத்திற்குச் சென்றேன். நடந்தவற்றை முதலாளியிடம் கூறினேன். கடைசிவரை வைத்தியசாலையில் டாக்டர்கள் எனக்கு என்ன நோயுள்ளது எனக் கூறவில்லை.

பின்னர் நான் தொழில் புரியும் இடத்திற்கு இருவர் வந்து என்னை அழைத்துச் சென்றனர். நான் அன்று முதல் தொழிலை இழந்தேன். எனக்கு என்ன நோயுள்ளது என வந்தவர்களிடம் கேட்டேன்.அதற்கவர்கள் உங்களுக்கு எயிட்ஸ் நோயுள்ளது. தொடர்ந்து இங்கே வேலை செய்ய முடியாது எனக் கூறி உடனே அழைத்துச் சென்றனர்.

அன்றுவரை எனக்கு எயிட்ஸ் என்றால் என்னவென்று தெரியாது. எப்படி வந்தது என்றும் தெரியாது. நான் தொழில் செய்த நாட்டிலும் என்னை ஒதுக்கி வைத்தனர். அத்துடன் அறையொன்றில் அடைத்தும் வைத்தனர். எனது மருத்துவச் செலவுக்குச் சென்றதை விட மீதமுள்ள பணத்துடன் ஓரிரு நாட்களில் என்னை இலங்கைக்கு அனுப்பி வைத்தனர்.

விமான நிலையத்தில் என்னை மகிழ்வுடன் வரவேற்றனர். இதை நினைத்து எனது நாட்டிற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். எனது உழைப்பின் கீழ்தான் எனது இரு சகோதரிகள், அம்மா ஆகியோர் வாழ்கின்றனர். அவர்களிடம் இதுபற்றிக் கூற முடியாது. அனைத்து வேதனைகளையும் மனதில் வைத்துக்கொண்டு இருந்தேன். இதன்போது தான் எமது நாட்டில் என் நோய்க்குரிய வைத்திய பரிசோதனைகளை மேற்கொண்டு பார்ப்போம் என நினைத்து ஆசிரி வைத்தியசாலைக்குச் சென்று இந்நோய்க்குத் தேவையான இரத்த,சிறுநீர் பரிசோதனைகளைச் செய்தேன். இவ்வைத்தியசாலையில் எனக்குக் கிடைத்த வைத்தியர் கடவுள் போன்று பல உபதேசங்களைச் செய்து மனதுக்கு ஆறுதலளித்தார்.

2003 ஆம் ஆண்டு ஆசிரி வைத்தியசாலையில் சிகிச்சைகளை மேற்கொண்ட பிறகு அன்று முதல் இன்றுவரை தேவையான மருந்துகளைக் குடித்து வருகின்றேன். இம்மருந்துகளை அரசாங்கம் குறைந்த விலையில் வழங்குகிறது. நான் இன்று ஒரு அரசாங்கத் தொழிலில் ஈடுபடுகிறேன்.

எனவே, நான் அனைவரிடமும் கூறிக் கொள்ள விரும்புவது என்னவெனில் எச்.ஐ.வி.எயிட்ஸ் தொற்றுநோய்க்குள்ளான ஒருவரை ஒதுக்கி வைக்காமல் அவர்களுக்கும் தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொடுத்து சமூகத்தில் முக்கிய பங்குகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றார்.

இதேவேளை, தொழில்புரிவோர்களிடையே தற்போது எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் தொற்றுக்குள்ளானோர் தாய்லாந்தில் 79.4 வீதமாகவும் சீனாவில் 64 வீதமாகவும் பங்களாதேஷில் 64.7 வீதமாகவும் மியன்மாரில் 76 வீதமாகவும் இலங்கையில் 60 வீதமாகவும் காணப்படுவதாகவும் எச்.ஐ.வி.எயிட்ஸ் தொற்றால் தாய்லாந்தில் 32 வீதமானோரும் பங்களாதேஷில் 43 வீதமானோரும் தொழில்வாய்ப்பை இழந்துள்ளதாக சர்வதேச தொழிலாளர் அமைப்பின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரையில் சுற்றுலாத்துறை,தோட்டத் தொழில்கள்,புலம்பெயர் தொழில்களினாலேயே இந்நோய் பாரிய சிக்கலாகவுள்ளது. இதற்கு எதிராகப் பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாகவும் தொழில் உறவுகள் அமைச்சர் கூறினார்.

எனவே, இலங்கையிலும் எயிட்ஸ் நோய்த் தொற்று அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இந்நோயைத் தடுத்து தொழிலாளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் எயிட்ஸ் நோயாளிகள் அதிகமுள்ள பட்டியலில் இலங்கையை இணைத்துக்கொள்வதைத் தடுக்க ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்.

எச்.ஹுஸ்னா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மருத்துவம்

# மூட்டு வலிக்கிறதா?

மூப்பு வரும்போது மூட்டு வலியும் தானாக வந்து விடுகிறது. இளம், நடுத்தர வயதினரையும் இந்தப் பிரச்சினை விட்டு வைப்பதில்லை. கொஞ்சம் உடற்பயிற்சி,கட்டுப்பாடான உணவு எதை கவனமாக இருந்தால் மூட்டுத் தேய்மானத்தையும் அதனால் ஏற்படும் மூட்டு வலியையும் தவிர்க்கலாம் என்கிறார் எலும்பு சிகிச்சை நிபுணர் டாக்டர் பிரேம்நாத்.

எலும்பு, நரம்பு மற்றும் தசைகள் நம் உடல் இயக்கத்தில் பெரும் பங்கு வகிக்கின்றன. நிற்கவும் உட்காரவும் நம் உடல் வளைந்து கொடுக்க உதவுபவை மூட்டுகள். இதில் முழங்கால் மூட்டு மிகவும் சிக்கலானது. எலும்பின் அசைவுக்கு உதவியாக அதன் மீது கட்டிலேஜ் என்ற சவ்வு உள்ளது. வயதாகும்போது இந்த சவ்வில் ஏற்படும் தேய்மானத்தால் எலும்பில் கிராக் மற்றும் பிராக்சர் போன்ற பிரச்சினைகள் வருகின்றன. இதன் காரணமாக வலி ஏற்படுகிறது. உடலின் எடையைத் தாங்கும் விதத்தில் முழங்கால் மூட்டு வலிமையுடன் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மூட்டு வெளியில் தெரியும் படி இருப்பதால் எளிதில் அடிபட்டுக் காயங்களுக்குள்ளாகிறது. இதனால் முழங்கால் மூட்டுப்பிடிப்பு மற்றும் பிறழ்வு ஏற்படுகிறது.

சைக்கிள் ஓட்டுதல், ஓடுதல் ஆகியவற்றால் மூட்டுத்தசை, நாண் அலர்ஜி ஏற்படலாம். மூட்டின் அதிக பயன்பாட்டால் அதன் முன் பக்கத்தில் வலி ஏற்படும். தசைநார் வலிப் பிரச்சினையிருக்கும்போது முழங்கால் மூட்டுவலி அதிகமாக இருக்க வாய்ப்புள்ளது. எலும்புத்தேய்வு,மூட்டு நாண் கிழிதல் போன்ற பாதிப்புகளின் காரணமாகவும் வ்லி ஏற்படலாம். சத்தான உணவு மற்றும் முறையான உடற்பயிற்சி, உடலை வேலை வாங்குவதில் கவனம் ஆகியவை அவசியம். சிறிய பிரச்சினை தோன்றும்போது உடனடியாக மருத்துவரை அணுகி சிகிச்சை பெறுவது நல்லது.மூட்டுப் பிரச்சினைகளுக்கு பிசியோதெரபி பயிற்சிகள் மூலம் தீர்வுகாண முடியும்.

பாதுகாப்பு முறை:

விபத்து, திடீர் அசைவு, அதிக இயக்கம் ஆகியவற்றால் ஏற்படும் தசை வலிகளை சில நடைமுறைகளால் தவிர்க்கலாம். மருத்துவரின் ஆலோசனைப்படி பயிற்சி செய்யலாம். உடற்பயிற்சிக்கு முன்னும் பின்னும் தசைகளை நீட்டி மடக்க வேண்டும். சூடான ஒத்தடம் கொடுப்பது நல்லது. நிறையத் தண்ணீர் குடிப்பதும் அவசியம். புரதங்கள் எலும்புக்கான கட்டமைப்பை வலுப்படுத்தும். கல்சியம்,பொஸ்பரஸ் ஆகிய தாதுக்கள் எலும்புக்கு வலுச் சேர்ப்பதால் உண்ணும் உணவில் கல்சியம்,பொஸ்பரஸ் அதிகம் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

சிறுவயதில் விளையாடும்போது ஏற்பட்ட பாதிப்புகள் காரணமாக கூட மூட்டுவலி ஏற்படலாம். முதுகுவலி மற்றும் மூட்டுவலியுள்ளவர்கள் குதித்தோடும் விளையாட்டுகளைத் தவிர்க்கலாம். குழந்தைகளுக்கு எலும்பின் இறுதிப் பகுதியில் எலும்பு வளரும் நுனி உள்ளது. இந்த வளரும் நுனி பாதிக்கப்பட்டால் எலும்புகளின் வளர்ச்சி தடைப்படும்.

பெரியவர்கள் வேலை செய்யும்போது ஒரே வேலையைத் திரும்பத் திரும்பச் செய்யாமல் இடையிடையே ஓய்வெடுத்துக்கொள்ளலாம். உடற்பயிற்சியை வழக்கப்படுத்திக்கொள்வதன் மூலம் வயதாவதால் ஏற்படும் தசை தேய்மானத்தைத் தடுக்கலாம். தசையை வலுவாக்கும் பயிற்சிகள் இதற்கு உதவும். முழங்கால் மூட்டு உடலின் எடையைத் தாங்குவதால் அதிக எடை வலியை ஏற்படுத்தும். இதைத் தவிர்க்க முறையான எடைக்குறைப்பு வழிகளை மேற்கொள்ளலாம். உணவில் உப்பின் அளவைக் குறைக்கவும். நீண்ட நேரம் பயணம் செய்யும்போது இடையில் நடப்பதும் கால்களை நீட்டி மடக்குவதும் நல்லது.மூட்டுப் பிரச்சினையுள்ளவர்கள் மருத்துவரின் ஆலோசனைப்படி செயல்படுவது பாதுகாப்பானது என்றும் அவர் கூறுகிறார்.

# வயிற்றுப்போக்கைத் தடுக்க...

பிறப்பிருந்து இறப்பு வரைக்கும் எல்லோருக்கும் எந்த வயதிலும் வரக்கூடிய பிரச்சினை வயிற்றுப்போக்கு. இது பாதித்த அனுபவம் எல்லோருக்கும் இருக்கும். சாப்பிடுகின்ற உணவு ஜீரணிக்கப்பட்ட பிறகு சிறுகுடலால் உறிஞ்சப்பட்டு மீதி பெருங்குடலுக்குத் தள்ளப்படுகிறது. சில சமயத்தில் சிறுகுடலிலிருந்து உறிஞ்சப்படலாம் அப்படியே பெருங்குடலுக்குத் தள்ளப்படும். அதோட பக்றீரியா தொற்றும் சேர்ந்துதான் வயிற்றுப்போக்கை உண்டாக்குகிறது. வயிற்றுக்போக்குக்கான காரணங்கள் நிறைய...

ஊரு விட்டு ஊரு,இல்லைனா நாடு விட்டு நாடு போறவங்களுக்கு இது சகஜம். ஆரோக்கியமில்லாத சாப்பாடு,சமைக்காத உணவு, கை,கால்களைச் சரியாகக் கழுவாமை இதற்குப் பல காரணங்கள். சின்னக் குழந்தைகளுக்கு வரக்கூடிய வயிற்றுப்போக்குக்கு இன்ஃபெக்ஷனோ,பால் அலர்ஜியோ காரணமாக இருக்கலாம். குழந்தைகளுக்குப் பேதியாகிறபோது இதெல்லாம் அந்த ரகம்.

பேதியைக் கட்டுப்படுத்தும் உணவுகள் என்று பார்த்த அரிசி,நெய்,ஜவ்வரிசி, ஆரோருடல் செய்த கஞ்சி,வெந்தயம், நீர் மோர், கரட், உருளைக்கிழங்கு என்று நிறைய இருக்கு.

வயிற்றுப்போக்கு வந்தவங்க அதிக நார்ச்சத்து உணவுகளைத் தவிர்க்க வேண்டும். அரிசிநெய்,சவ்வரிசி, ஆரோருடல் மாவில் தளர்வா,கொஞ்சமா உப்பு சேர்த்த கஞ்சியை அடிக்கடி கொஞ்சமா ஒவ்வொரு டிஸ்பூனா,ஒரு நிமிடம் எடுத்து விழுங்கிறது நல்லது. தேநீர் குடிக்கிறது உடம்புல உள்ள நீர்ச்சத்தை அழிச்சிடும். ஓரளவு கெட்டியான சூப்பும் குடிக்கலாம். பெரியவங்களுக்கு பேதியானா, நீர்மோரில் வெந்தயப்பொடி சேர்த்துக் குடிக்கலாம்.

தாய்ப்பால் குடிக்கிற குழந்தைகளுக்கும் பேதியாகலாம். அதுக்காக தாய்ப்பால் கொடுக்கிறதை நிறுத்தக்கூடாது. பவுடர் அலட்சியம் கூடாது. 2,3 தடவை போனாலோ என்ன என்று கவனிக்க வேண்டும்.

வயிற்றைக் காயப் போட்டாலே இந்தப் பிரச்சினை சரியாகிவிடும் என்பது பலரின் நம்பிக்கை. அது ரொம்ப தப்பு. வயித்துக்கு ஓய்வே கொடுக்கக்கூடாது. இரத்தம் கெட்டியாகிறது. உடம்புல உள்ள நீர்ச்சத்தெல்லாம் வறண்டு போகிறது. மயக்கம் என்று அதோட பின் விளைவுகள் பயங்கரமா இருக்கும்.

வயிற்றுப்போக்கை அதிகப்படுத்துற உணவுகள் என்று சிலதைச் சொல்லலாம். பீன்ஸ்,வெங்காயம், முட்டைக்கோஸ்,சுண்டல், முழுத்தானிய உணவுகள், பழங்கள்,காய்கறிகள், பால், ஜூஸ், போத்தல் பானங்கள், பால் கொடுக்கிற குழந்தைகளுக்கு அதை மாத்தின உடனே சரியா ஜீரணமாகாமல் போகலாம். குழந்தையின் உடல்வாகு அதோட செரிமானத் திறன் எல்லாம் பார்த்து டாக்டரோட அறிவுரைப்படி புது உணவை ஆரம்பிக்கிறது நல்லது. கஞ்சியாக இருந்தால் குழந்தைகளுக்கு வடிகட்டியும் பெரியவங்களுக்கு அப்படியேயும் கொடுக்கலாம்.

ஒரேஞ்சு சாத்துக்குடி ஜூஸ் நல்லது, அப்பிள்,பேரீச்சம்பழம், பச்சைத் திராட்சை தவிர்க்கப்பட வேண்டும், சொக்லேட் கூடாது. அதிலுள்ள சார்பிட்டால் என்ற செயற்கை இனிப்பு பிரச்சினையை இன்னும் தீவிரப்படுத்தும். அதிக இனிப்பு, அதிக உப்பு இரண்டுமே தவிர்க்கப்படல் வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குழந்தை நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே என்பார்கள். ஆனால், குழந்தை தீயவராக மாறுவதற்குப் பெற்றோர் மட்டும் காரணமல்ல என்கிறது இந்த உண்மைச் சம்பவம். தற்செயல் நிகழ்வுகூட ஒருவரின் வாழ்க்கையை முற்றிலும் திசைமாற்றக்கூடும் என்கிறது இந்தக் கட்டுரை நாயகனின் கதை.

# விநோத திருடன்



இங்கிலாந்தைச் சேர்ந்தவர் ஜோர்ஜ் ராம்ப்லின். இவரது மனைவி பெயர் அனிதா. ஜோர்ஜியா என்ற 13 வயது மகளும் உள்ளாள். 22 ஆண்டுகளாகத் தபால்காரராக பணி அனுபவம் உள்ளவர். ஆண்டுக்கு 60 இலட்சம் ரூபா சம்பளம் பெறுகிறார். நேர்மையான ஊழியர் என்று பெயரெடுத்தவர். ஆனால்,சமீபகாலமாக அவர் மீது தபால் பார்சல்களை திருடுவதாகப் புகார்கள் வந்தன.

ஜோர்ஜின் நடத்தையை வைத்து அவரை யாராலும் சந்தேகப்பட முடியாது. அந்தளவுக்கு நேர்மையானவர். ஆனால், பார்சல்கள் திருட்டுப் போன பகுதி அவரது கட்டுப்பாட்டிற்குட்பட்ட பகுதி என்பதால் அவரை இரகசியமாக கண்காணிக்கத் தொடங்கினார்கள் தபால் அதிகாரிகள்.

பெரிய பார்சல் ஒன்றை தங்களுக்கு நன்கு பரீட்சயமான முகவரிக்குத் தபால் அதிகாரிகளே அனுப்பி கண்காணித்தனர். அவர்கள் எதிர்பார்த்தது போலவே பார்சல் அந்த முகவரிக்குப் போய்ச் சேரவில்லை. அந்தப் பகுதிக்குரிய தபால்காரரான ஜோர்ஜ் அதிகாரிகளின் பொறியில் சிக்கிக் கொண்டார். புகார் வழக்காக மாறி நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

பார்சலில் குழந்தைகளுக்கான வீடியோ கேம்ஸ் அடங்கிய டி.வி.டி.கள் இருந்தன. ஏற்கனவே இதுபோன்ற பார்சல்களே திருடப்பட்டிருந்தன. எனவே,ஜோர்ஜ் தனது குழந்தைக்காக இதுபோன்ற பார்சல்களை திருடியிருக்கலாம் என்பது தபால் அதிகாரிகள் மற்றும் பார்சலை பறி கொடுத்தவர்களின் எதிர்பார்ப்பு. ஆனால், ஜோர்ஜ் திருடியதற்கான உண்மையான காரணம் வேறு.

ஜோர்ஜ் 10 வயதாக இருந்தபோது நடந்த அதிர்ச்சியான சம்பவம் ஒன்றுதான் அவர் திருடனாக மாறியதற்குக் காரணம் என்று நீதிமன்றிலும் நிரூபிக்கப்பட்டது. இதை நிரூபிப்பதற்காக ஒரு சிறு ஆய்வே செய்யப்பட்டது. அந்த ஆய்வு...

ஜோர்ஜை குழந்தைகள் விளையாடும் டிஸ்னிலேண்டிற்கு அழைத்துச் சென்றனர். அங்கிருந்த இராட்சத ஆகாய சறுக்கில் ஏறி விளையாட அனுமதித்தனர். அப்போது 43 வயதான ஜோர்ஜ் சிறு குழந்தையைப்போல மிகவும் பயந்து அலறி நடுங்கினார். இதன் காரணம் என்ன என்பதை மருத்துவ ரீதியில் ஆராய்ந்தபோது அவர் ஏன் திருடன் ஆனார் என்பதற்கான உண்மைக் காரணம் வெளிப்பட்டது.

ஜோர்ஜ் 10 வயது (1978 இல்) சிறுவனாகவிருந்தபோது சக மாணவர்களுடன் சுற்றுலா சென்றிருக்கிறார். அப்போது எதிர்பாராத விபத்து நடந்திருக்கிறது.மினிபஸ் ஒன்று மாணவர்கள் சென்ற வான் மீது மோதியதில் ஆசிரியையும் 7 மாணவர்களும் பலியாகினர். ஜோர்ஜுக்கு தலையில் பலத்த காயமேற்பட்டது. ஒருவார காலம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினான்.

விபத்தில் தலையில் அடிபட்டதால் அந்த அதிர்ச்சி அப்படியே நினைவில் பதிந்து போயிருந்திருக்கிறது. விபத்து நினைவு வரும்போதெல்லாம் ஜோர்ஜ் சுயநினைவை இழந்து செயல்படுவது உண்டு. அது நாளடைவில் மனநிலை பாதிப்பாக மாறியிருக்கிறது.இதுதான் தபால்காரரான ஜோர்ஜ் ராம்ப்லின் திருடர் ஆனதற்கான காரணம்.

டிஸ்னிலேண்டில் விளையாடியபோது அவருக்குப் பழைய விபத்து நினைவுக்கு வருவதும் அதனால் அவர் தன் நிலையை மறந்து சிறு குழந்தை மனநிலைக்குப் போவதாகவும் ஜோர்ஜுக்காக வாதாடிய சட்டத்தரணி கூறினார். மருத்துவ சான்றிதழ்களும் சமர்ப்பிக்கப்பட்டன.

ஜோர்ஜின் மனைவி அனிதாவும் மகள் ஜோர்ஜியாவும் இணைந்து நீதிபதிக்கு ஒரு கடிதம் எழுதினர். என் தந்தையை ஜெயிலில் தள்ளிவிடாதீர்கள். எங்களைவிட்டுச் செல்ல அனுமதிக்காதீர்கள் என்று 13 வயது ஜோர்ஜியா நீதிபதிக்கு விண்ணப்பம் செய்திருந்தாள்.

நான் சில நேரங்களில் குழந்தை மனநிலைக்குச் சென்றுவிடுவேன். அப்போது பார்சலில் வரும் குழந்தைகளுக்கான பொருட்களை மட்டும் திருடிவிடுவேன். அது பெரிய தவறு என்பதைப் புரிந்துகொண்டேன் என்று ஜோர்ஜும் வருத்தம் தெரிவித்தார்.

வாதங்களை ஏற்றுக்கொண்ட நீதிபதி தண்டனையின் கடுமையைக் குறைத்தார். ஜோர்ஜின் மனநிலையைக் கருத்தில் கொண்டு 6 மாத காலத்திற்கு மாலை 7 மணி முதல் காலை 7 மணி வரை அவர் வீட்டைவிட்டு வெளியே செல்லத் தடைவிதித்து தீர்ப்பு வழங்கினார். வழக்கிற்கான செலவை அபராதமாக விதித்தார்.



# ‘குண்டு’ மணி

உகண்டா நாடு ஒரு இரத்த பூமி,யுத்த பூமி,எப்போது வேண்டுமானாலும் அங்கு போர் நடக்கும். குண்டு வெடிக்கும்.இரத்தம் சிதறும்.இதற்கெல்லாம் பழகிப்போன மண் உகண்டா மண்.

தன் நாட்டு சிறுவர்,சிறுமியருக்கு எப்படி குண்டுகளைக் கண்டுபிடிப்பது,கண்ணி வெடி என்றால் என்ன, அதன் தன்மை என்ன, எப்படி ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படைகளைக் கற்றுக் கொடுக்க ‘ஆன்ட்டி மைன் நெட்வேர்க்’ என்ற அமைப்பு நாடு முழுவதும் பயணம் செய்து பள்ளிக்கூடங்களுக்குச் சென்று மேற்படி பாடங்களை நடத்துகிறது.

அப்படி சமீபத்தில் ஒரு பள்ளிக்கூடத்துக்குச் சென்ற அந்த அமைப்பினர் அங்கே ஒரு வகுப்பு முடிந்து அடுத்த வகுப்பு தொடங்குவதற்கான அடையாள மணி அடிக்கப்பட்டபோது அந்த மணியைக் கண்டு அதிர்ந்து போனார்கள்.பொதுவாக இந்த பள்ளிக்கூட மணிகள் வட்ட வடிவமாக தோசைக்கல் போல எஃகில் வார்க்கப்பட்டிருக்கும்.இல்லாவிட்டால் அது ஒரு துண்டு தண்டவாளமாக இருக்கும். ஆனால் அந்தப் பள்ளிக்கூடத்தில் ஒரு வெடிகுண்டையே மணியாகத் தொங்க விட்டு கல்லால் அதை அடித்து ஸ்கூல்




பெல்லாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள்.அந்த வெடிகுண்டைப் பார்த்த ஆன்ட்டி மைன் நெட்வேர்க்கினர் மேலும் அதிர்ந்து போனார்கள்.குண்டின் வாய்ப்பகுதி ‘லைவ்’ ஆக இருந்ததே காரணம்.

பலமாக அடித்தால் அந்தக் குண்டு வெடித்துச் சிதறும் வாய்ப்பு இருந்தது. இதனால் பல நூறு பள்ளிக் குழந்தைகள் வெடித்துச் சிதறலாம்.அந்தப் பள்ளியின் கட்டிடப் பகுதிகள் சேதமாகலாம்.யார் செய்த தவறு இது?

அந்த மணியை அகற்றிக் கொண்டு போய் ஆள் நடமாட்டமில்லாத பகுதியில் செயலிழக்கச் செய்யப் போகிறது அந்த அமைப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அக்கம் பக்கம்

## இப்படியும் ஏமாற்றுகிறார்கள்

தங்கம் நாளுக்கு நாள் விலை உயர்ந்து கொண்டே செல்கிறது.தங்கத்தில் முதலீடு செய்பவர்கள் ஒருபுறம் அதிகரித்து இருந்தாலும் விலையேற்றத்தால் விற்பனை சரிந்திருக்கத்தான் செய்கிறது.எனவே குறைந்த விலையில் பழைய தங்கத்தை வாங்குவதில் பலரும் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

பிரபல நகைக்கடையொன்றுக்கு அந்த டிப்டொப் ஜோடி வந்திறங்கியது.வசதியானவர்கள் என்பது அவர்களது தோரணையில் தெரிந்தது.எல்லாவிதமான நகைகளையும் பார்த்தார்கள்.பிடித்தமான பல நகைகளை தேர்வு செய்தனர். ‘பில்’ பல இலட்சங்களுக்கு வந்தது.

பில் செலுத்தும்போது தாங்கள் பெரும் பரம்பரையைச் சேர்ந்தவர்கள்.எங்களிடம் பழைய நகைகள் கொஞ்சம் இருக்கிறது.அதை வாங்கிக் கொள்வீர்களா? என்று கேட்டிருக்கிறார்கள். பல இலட்சங்களுக்கு நகைகள் வாங்கியிருந்ததால் அவர்களை நம்பத் தொடங்கினார் கடை முதலாளி.

மறுநாள் பழைய ஆபரண நகைகளைக் கொண்டு வந்தது அந்த டிப்டொப் ஜோடி.எடை போடப்பட்டது. சுமார் 3 கிலோ நகைகள் இருந்தன.

‘எங்கள் பரம்பரையின் பெருமை மிக்க பழங்காலத்து நகைகள் இவை.இதை இக்காலத்தில் அப்படியே பயன்படுத்துவது நன்றாக இருக்காது.உருக்கி புதிய டிசைன் செய்வது எங்களுக்கு சிரமமாக தெரிகிறது.அதனால்தான் விற்கிறோம்’ என்று நயமாகப் பேசி கட்டுப்படியான விலைக்கு பேசி முடித்தது அந்த ஜோடி.

நகைக்கடை முதலாளிக்கும் சந்தோஷம்.பல இலட்சம் நகை வியாபாரமாகி இருக்கிறது.அதைவிட அதிகமான நகைகள் குறைந்த விலைக்கு கிடைக்கிறது என்று எண்ணி அந்த நகைகளை வாங்கிக் கொண்டார். உரசிப்பார்த்தார் ஒரு சந்தேகமும் இல்லை.நகைகளும் ரொக்கமும் கைமாறியது.சந்தோசமாக விடைபெற்றது அந்த ஜோடி.

10 நாட்கள் கழிந்தது.நகைக்கடை அதிபர் பழங்கால நகைகளை உருக்கி நகை செய்யச் சொன்ன இடத்தில் இருந்து அதிர்ச்சி தரும் தகவல் வந்தது.பழைய நகைகளை வெட்டிப் பார்த்தபோது நகைகளுக்குள் ஆழத்தில் கனமான செப்புக் கம்பிகள் பதிக்கப்பட்டிருந்தன.எளிதில் கண்டுபிடிக்க முடியாத அளவில் மிக தந்திரமாக நடுவே இணைக்கப்பட்டிருந்தது கம்பிகள்.பதிக்கப்பட்டிருந்த கற்கள்,கம்பிகளை நீக்கிப் பார்த்தால் மிக குறைவாகத்தான் தங்கம் இருந்தது.நகைக் கடைக்காரருக்கோ சில இலட்சங்கள் இழப்பு ஏற்பட்டது.அந்த டிப்டொப் ஜோடி கொடுத்த முகவரியில் யாருமில்லை.எவ்வளவு விசாரித்தும் அந்த ஜோடியை கண்டுபிடிக்க முடியவில்லை.

இப்படி கிளம்பி இருக்கிறார்கள் பலர்.முன்பெல்லாம் வீட்டில் தனியாக இருக்கும் பெண்களிடம் நயமாகப் பேசி இதுபோல் போலி நகைகளைக் கொடுத்து ஏமாற்றுவார்கள்.இப்போது துணிச்சலாக நகைக் கடைக்குச் சென்று ஏமாற்றும் அளவுக்கு காலம் மாறிவிட்டது.எனவே பெண்கள் மட்டுமல்ல நகைக்கடை முதலாளிகளும் உஷாராக இருக்க வேண்டிய நிலைமை.

## காதலில் வெற்றி பெற...

காதலை உணர்கிற தருணமும் காதலோடு நாம் வாழ்கிற தருணமும் மிக மிக அற்புதமானது.வெற்றி,தோல்வி என்பதைத் தாண்டி காதல்தான் மனிதனை வழி நடத்துகிறது.அப்படிப்பட்ட காதலை சொல்ல பல வழிகள் உண்டு.முன்பெல்லாம் அன்னம்,மயில் என பறவைகளை தூதுவிட்டு காதலை தெரிவித்தனர்.இந்த நவீன யுகத்தில் பாதுகாப்பாக எவ்வாறு காதலை வெளிப்படுத்தினால் வெற்றிகரமாக்க முடியும் என்பதற்கு சில யோசனைகள்.

நம் ஒவ்வொருவருக்குமே நமக்கு மிகவும் பிடித்தமானவர்களை சந்தித்த அந்த முதல் தருணம் மறக்க முடியாதது.அதனை நினைவூட்டும் விதமாக நம்முடைய செயல்கள் இருக்க வேண்டும்.

நாம் காதலிக்கிறோம் என்பதை விட நாம் காதலிக்கப்படுகிறோமா? என்பது மிகவும் முக்கியமானது.நீங்கள் விரும்பும் நபரே உங்களை விரும்புகிறார் என்றால் உங்களை விட அதிர்ஷ்டசாலி யாரும் கிடையாது.உடனடியாக காதலை உறுதி செய்யும் நடவடிக்கையில் இறங்க வேண்டியதுதான்.

நண்பர்களுடன் சேர்ந்திருக்கும் தருணங்களில் உங்களவர் உடன் இருந்தால் அவரது மொத்த கவனமும் உங்கள் மீது மட்டுமே பதிகிறதா என்று கவனிக்கவும்.

நீங்கள் கூறும் ஒவ்வொரு வார்த்தையும் உன்னிப்பாக கவனித்து பதில் கொடுத்தால் நிச்சயம் அவர் உங்களுடையவர்தான்.

சாதாரணமாக பேசும் பொழுது நீங்கள் அணிய உள்ள உடையின் நிறம் பற்றி நண்பர்களுடன் பேசுங்கள்.உங்களுக்கு மிகவும் பிடித்த கலரை நீங்கள் அணிய உள்ளதாக கூறினால் நீங்கள் விரும்பும் நபரும் அதே கலர் உடையில்தான் வருவார் என்பது நிச்சயம்.

உங்களுக்குப் பிடித்த பாடலை முணுமுணுங்கள்.உடனே அது உங்களவரின் ரிங்டோனாகவோ,காதலர் டியூனாகவோ மாறிவிடும்.

பிடித்த பொருட்களை கூறுவதை விட பிடிக்காத விடயங்களை கூறுங்கள்.மறுநாள் முதல் நீங்கள் விரும்பும் நபருக்கு அது பிடிக்காததாகிவிடும்.

எந்த ஒரு விசேட தினமென்றாலும் வாழ்த்து சொல்லுங்கள்.அது உங்கள் மீதான மதிப்பை அதிகமாக்கும்.

எதற்காகவும் பொய் சொல்லாதீர்கள்.காதல் தருணங்களில் உண்மைதான் அன்பின் ஆழத்தை அதிகப்படுத்தும்.

நீங்கள் விரும்பும் நபர் உங்களைத்தான் விரும்புகிறார் என்பது நிச்சயமாக தெரிந்து விட்டால் நேரடியாக சென்று இடம்,பொருள் பார்த்து காதலை வெளிப்படுத்துங்கள்.இந்த காலத்தில் தூது விடுவது எல்லாம் சரிப்பட்டு வராது.நாம் காதலிக்கும் நபரிடம் இருந்து முத்தமோ அடியோ எதுவென்றாலும் வாங்குவது நாமாகத்தான் இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணகியர் மூவர்

புலவர் சு.தி.சங்கரநாரயணன்

மொட்டு அவிழும் பருவத்து மலர் போன்று சிறிதே இதழ்கள் பிரித்து உள்ளத்து எழும் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதை புன்னகை, புன்முறுவல்,குறுநகை,இளநகை என்பர். நாணமும், மடமும் கொண்டு குறுநகை புரிந்துவாழ வேண்டிய மங்கையரான கண்ணகியர் மூவர் துன்பக் கேணியில் தத்தளித்த வரலாற்றைப் புறநானூற்றிலும் சிலப்பதிகாரத்திலும் காணலாம்.

சோழநாட்டு அழிசி என்னும் ஊரில் ஒரு பெருங்காடு. அங்கே இனிப்பும் புளிப்பும் கலந்த சுவையான கனிதரும் நெல்லிமரம். வௌவால் ஒன்று வந்து அம்மரத்திலுள்ள நெல்லிக்கனியை உண்டு மகிழ்ந்தது. பின்னர் தன் இருப்பிடமான கடற்கரை பரதவர் குடியிருப்புக்குச் சென்றது. அங்குள்ள மாமரத்தின் கிளையில் சுகமாகத் தூங்குகிறது. இக்காட்சியை தலைவி ஒருத்தி தன் கனவில் கண்டதாகத் தன் தோழியிடம் கூறுகிறார். இந்த உருவகக் கதையால் தலைவி இயற்கைப் புணர்ச்சி (முதல் சந்திப்பு) எய்தி இன்புறுவதை தோழி அறிந்து கொண்டாள். இதை நற்றிணை 87 ஆம் பாடல் கூறுகிறது.

சிலநாட்கள் சென்றன. வௌவாலாக உருவகம் செய்த அந்தத் தாழை மணம் கமழும் கடற்கரை ஊர்த் தலைவனைக் கண்டாள் தோழி. பிரிவால் வாடி வதங்கும் தலைவியை ஏற்று மணம் புரிந்து இன்புறுமாறு அவனை அழைக்கிறாள். இவ்வாறு நற்றிணை 19 ஆம் பாடல் கூறுகிறது.

மேலும் சில நாட்கள் கழிந்தன. போர் மூழ்கிறது.மூன்றடுக்கு முறையில் படைகள் சூழ்ந்திருக்க, ஆமூர் கோட்டையை மல்லன் ஒருவன் காத்து நிற்கிறான். சோழன் தித்தன் மகனான போர் வைக்கோப் பெருநற்கிள்ளி என்னும் இளவரசன் அந்த ஆமூர் கோட்டையைக் கைப்பற்றச் செல்கிறான். எதிரியை முறியடிக்கிறான். போரில் வெற்றி பெறுகிறார். ஆனால், களம்பட்டான். (வீரமரணம் அடைந்தான்) போர்க்களத்தில் வீரர் பலர் ஆடு ஆடு (வெற்றி வெற்றி) என்று ஆர்ப்பரிக்கின்றனர். தலைவன் களத்தில் வீரமரணம் அடைந்ததை அறிந்த சிலர் ஆடன்று ஆடன்று (வெற்றி அல்ல-வெற்றி அல்ல) என்று கூவிப் புலம்புகின்றனர்.

போர் வைக்கோப் பெருநற்கிள்ளியை (வை,கோ என்னும் இரண்டு தலைமைப் பண்பை உணர்த்துவன) களவுப் புணர்ச்சியில் ஒரேயொருமுறை கூடிக் கலந்து மகிழ்ந்த தலைவி. ஆடு ஆடு எனவும் ஆடன்று ஆடன்று எனவும் இரு வகையான ஆர்ப்பரிப்பைக் கேட்டாள். உண்மையை அறிய ஊர் எல்லைக்கு ஓடினாள். சற்று மேடான நிலத்திலுள்ள பனை மரத்தின் அடியில் நின்றாள்.

போர்க்களத்தில் வீர மரணமடைந்த தலைவனை அள்ளியெடுத்துத் தன் மடியில் இருத்தி, மார்புறத் தழுவ ஆசை கொள்கிறது அவளது மனம். ஆனால், மணந்து கொள்ளாதா ஒருத்தி களம்பட்ட வீரனைத் தழுவுதல் கண்டு ஊரவர் பழிதூற்றுவார்களே என எண்ணி அஞ்சி அவளது உடல் நடுங்குகிறது. துணிந்தாள்,அச்சம் தவிர்த்தாள், தன் காதலனை வெற்றிபெற்ற தானைத் தலைவனை மார்புறத் தழுவ ஆசை கொண்டு போர்க்களம் நோக்கி ஓடினாள்.

இந்தத் துன்பியல் காட்சியைப் புறநானூற்றில் (பா 85) காணலாம்.

இம்மூன்று பாடல்களில் நகக்கண்ணையா என்ற பெண்பாற் புலவர்தன் வரலாற்றை வெளியிட்டுள்ளார். மேலும், இவர் செய்த புறம்-83.84: அகம்-252 ஆகிய மூன்று பாடல்களும் உள்ளன.




மழையில் நனைந்து வருந்திய மயிலுக்குப் போர்வை ஈந்தவன் வள்ளல் பேகன். அவன் தன் மனைவியான கண்ணகியைப் பிரிந்து பரத்தையான வேறு ஒரு துணைவியோடு இன்புற்றிருந்தான். நீர்வடிக்கும் மழைக் கண்ணுடன் பொழுது கழித்து வரும் மனையாளோடு இணைந்து பரத்தமை விடுத்து இல்லறம் நடத்துமாறு கபிலர், பரணர், அடிசில்கிழார்,பெருங்குன்றூர்கிழார் ஆகிய புலவர் நால்வர் பேகனுக்கு அறிவுரை கூறிய வரலாற்றையும் புறநானூறு கூறுகிறது.

சிலப்பதிகாரம்-இந்திரவிழா எடுத்த காதையில் கண்ணகியின் துன்புற்ற கருங்கண்ணுக்கும் மாதவியின் செங்கண்ணுக்கும் உவமைக் காட்சியாகத் தேன்வடிக்கும் கழுநீர்ப்பூ ஒன்றையே காட்சிப்படுத்துகிறார் இளங்கோ.

இயற்கைப் புணர்ச்சியாக ஒரேயொரு முறை மட்டும் கூடி மகிழ்ந்த பின்னர் திருமணம் கைகூடாத நிலையில் போர்க்களத்தில் பட்டுக்கிடக்கும் தலைவன்னத் தழுவ முயன்றும் முடியாமல் மருகி அழும் நக்கண்ணையாரை அறிந்தோம்.

ந+ கண்ணை+ஆர்=நக்கண்ணையார். ந-என்பதும் ஆர்-என்பதும் சிறப்பு அடைமொழிகள். கண்+ நகி=கண்ணகி. கண்ணால் நகுதலைச் செய்பவர். உள்ளக்கிடக்கை( உள்ளத்தில் உள்ளதை) உணர்த்துவது கண்களே ஆகும். வள்ளல் பேகன் மனைவியும் கோவலன் மனைவியும் பெயரில்தான் கண்ணகியரேயன்றி,அவ்விருவரும் அவலத்தில் சிரித்தவர்களே ஆவர். இதனால் கண்ணகி என்ற பெயரே ராசி இல்லாதது என்று தமிழ் மக்கள் எண்ணினர் போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்கியத்தை முடிக்கத் திணறிய அறிஞர்

டென்மார்க்கைச் சேர்ந்த நீல்ஸ்போர் என்ற அறிவியல் அறிஞர் நிறைய ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.ஆனால் அவர் தன் மாணவர்களிடம் கட்டுரைகளை எழுதுவதற்காக குறிப்புகளை சொல்லும்போது சில நேரங்களில் ஏற்கனவே எழுதச்சொன்ன வார்த்தைகளை மாற்றச் சொல்வார்.நீண்ட நேரம் ஆராய்ச்சி செய்து சமன்பாடுகளை உருவாக்குவார்.பின் மீண்டும் கட்டுரைகளை சரிபார்த்து விட்டு மேலும் செய்திகளை சேர்க்கச் சொல்வார்.புத்தக அலுமாரிக்குச் சென்று புத்தகங்களை எடுத்துக் குறிப்புகளை சேகரிப்பார்.அதில் இருந்து தேவையான குறிப்புகளை எடுத்துக் கொண்டு அவற்றைக் கட்டுரைகளில் சேர்த்து விடுவார்.

இதற்கு நேர்மாறானவர் டிராக்.அவர் எதையுமே துல்லியமாக சிந்திக்கக்கூடியவர்.தேவையான குறிப்புகளையும் வார்த்தைகளையும் முறையாக தயார் செய்த பின்னரே கட்டுரைகளை எழுதத்தொடங்குவார்.அதன் பிறகு எந்தக் காரணத்தைக் கொண்டும் திருத்தம் செய்யமாட்டார்.

ஒருமுறை டிராக்,நீல்ஸ்போரை பார்க்கச் சென்றார்.நீல்ஸ்போர் அங்கும் இங்குமாக ஓடிக்கொண்டு இருந்தார். ஏன் இப்படி கஷ்டப்படுகிறீர்கள்? என்று கேட்டார்.அதற்கு ஒரு வாக்கியத்தை ஆரம்பித்தால் அதை திருப்திகரமாக முடிக்கவேண்டும்.இல்லாவிட்டால் எனக்கு உறக்கமே வராது.நீ இப்படி ரிஸ்க் எடுக்க மாட்டாயா?என்று கேலியுடன் கேட்டார்.

அதற்கு டிராக் எனக்குப் பாடம் சொல்லிக்கொடுக்க ஆசிரியர் ஒரு வாக்கியத்தை எப்படி முடிப்பது என்று தெரியாமல் அதைத்தொடங்காதே என்று தான் சொல்லிக் கொடுத்திருக்கிறார் என்றார் அமைதியாக.




## மனநலமற்றவரின் சேவை



ஒக்ஸ்போர்ட் பேராசிரியர் ஜேம்ஸ் முரே, ஆங்கில அகராதியைத் தொகுத்துக் கொண்டிருந்தார். அப்போது டாக்டர் மைனர்ஸ் என்பவரிடம் இருந்து அவருக்கு உருப்படியான யோசனைகள், புதிய வார்த்தைகள், அதன் அர்த்தங்கள் என்று தொடர்ந்து கடிதங்கள் வந்து கொண்டிருந்தன.

அவருக்கு நேரில் நன்றி தெரிவிப்பதற்காகக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்த விலாசத்துக்குச் சென்ற பேராசிரியர் முரேவுக்கு அதிர்ச்சியாக இருந்தது. அது ஒரு மனநலமற்றோர் விடுதி. முரே அதன் அதிகாரியைக் கண்டு பேசினார்.

டாக்டர் மைனர்ஸ் புத்தி பிசகி ஒருவரைக் கொன்று விட்டதாகவும் சிகிச்சைக்காக அங்கு இருப்பதாகவும் அதிகாரி தெரிவித்தார்.விடுதியில் ஓயாமல் படித்துக்கொண்டிருந்த மைனர்ஸ் தமக்குத் தோன்றிய வார்த்தைகளை ஜேம்ஸ் முரேவுக்கு எழுதியனுப்பிக் கொண்டிருந்தார்.அவர் கண்டு பிடித்த ஆயிரக்கணக்கான வார்த்தைக்ள் ஒக்ஸ்போர்ட் அகராதியில் உள்ளன.

## பார்வையற்ற மேதை

ஜப்பானைச் சேர்ந்த ஹோகிசி [1722-1823] புகழ்பெற்ற கல்விமான்.ஒரு வயதில் அவர் பார்வைத் திறனை இழந்துவிட்டார்.பின்னர் தான் வாழ்ந்த 94 வருடங்களையும் பிறருக்குக் கற்றுக் கொடுப்பதிலும் எழுதுவதிலும் கழித்தார் ஹோகிசி. அவரது நினைவாற்றல் அதிசயமானது.பிறர் படிப்பதை ஒரு முறை கேட்டாலே அவர் மனதில் பதிந்துவிடும்.2820 பாகங்கள் கொண்ட குன்ஷோ ருஜூ என்ற நூலை அவர் தொகுத்தார்.1910 இல் அது வெளியானது.அவ்வளவு பெரிய நூலை யாருமே தொகுத்தது இல்லை.

## குறுக்கெழுத்துப்போட்டி - 93

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | | 15 | 16 |
| 17 | 18 | | 19 | | 20 |
| 21 | 22 | 23 | 24 | | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

**இடமிருந்து வலம்**

1. உலகப்பொதுமறை
7.அரசாங்கத்திற்கு வருமானம் கிடைக்கும் முக்கிய வழி (திரும்பியுள்ளது)
9. காய்ந்த இலையை இப்படிச் சொல்வர் (குழம்பியுள்ளது)
12. எதிர்பார்ப்புகள் நிறைவேறாவிட்டால் ஏற்படுவது
15. நீர் அள்ளப் பயன்படும் கலம் (திரும்பியுள்ளது)
17. வீட்டில் வளர்க்கும் மிருகம்.செல்வம் என்றும் பொருள்படும் (திரும்பியுள்ளது)
21. கருமை,புறம்போக்கு நிலம்
26. பாதுகாத்தல்,நிர்வகித்தல் (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1.பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று.மூவகை மருந்துச் சரக்குகளை இப்படிச் சொல்வர்.
2. அதிக வருவாய் பெறுபவர்களுக்கு விதிக்கப்படும் வரி (குழம்பியுள்ளது)
4. ஆசான். வியாழ பகவானை இப்படிச் சொல்வர்.
5. ஒருவகை வித்தை (குழம்பியுள்ளது)
6.முஸ்லிம்களின் வணக்க ஸ்தலம் (குழம்பியுள்ளது)
19. நீரிழிவு நோயாளர்கள் உண்ண வேண்டிய மரக்கறி (குழம்பியுள்ளது)
23. அடுக்குச் சொல்லானால் நீரோட்டத்தைக் குறிக்கும்.

பெயர் : ..............................................

முகவரி : ..............................................

..............................................

### குறுக்கெழுத்துப்போட்டி - 91 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. இடமாற்றம் | 1.இசைத்தமிழ் |
| 7.கசையடி | 2.கடகம் |
| 12.கத்தம் | 3.மாயம் |
| 17.தம் | 4.தருடிகம் |
| 19.அகர | 6.சதுரங்கம் |
| 23.துத்தம் | 20.அத்தி |
| 27.புகழ் | 23.தபு |
| 30.சதி | |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**கே.இராஜகோபால்,**

**அடைக்கலம் தோட்டம்**

**கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை.**

### பாராட்டுப் பெறுவோர்

01. அன்ரனி பாத்திமா
இல.99/B கொலன்னாவ,
வெல்லம்பிட்டிய.

02. இ.சயிலாஷ்
இல.5, பிள்ளையார் கோயில் வீதி,
உப்போடை, மட்டக்களப்பு.

03. எம்.பி.முகைடீன்,
இல.352 'பிர்தௌஸ்',
பெரியநிலாவணை.

04. எம்.மயூதினி
காலி வீதி,
வெள்ளவத்தை.

05. என்.நிஷாந்தினி
பதுளை.

*உங்கள் விடைகளை*
**Saturday மெயில்**
**இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15**
*என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவைக் கெடுக்கும் மூட நம்பிக்கைகள்




சில பெண்களுக்கு இயல்பிலேயே தாம்பத்திய உறவில் அவ்வளவாக நாட்டமிருக்காது.இதற்கு காரணம் அவர்களிடம் இருக்கும் கூச்ச சுபாவம். சிறுவயதில் இருந்தே ஆண்,பெண் உறவை பற்றி பெரியவர்கள் சொல்லிக் கொடுத்த விதமும் செக்ஸ் என்றாலே பெண்களிடம் ஒரு வித வெறுப்பினை ஏற்படுத்தி விடுகின்றன. உறவைப் பற்றிய தவறான மனப்பான்மை, தேவையற்ற பயங்கள், மூட நம்பிக்கைகள் போன்றவையும் பெண்களது இப் பிரச்சினைக்குக் காரணங்கள்.

முதல் உறவில் தொடங்கி குழந்தை பிறப்பதில் பிரசவ வலியில் உள்ள தேவையற்ற பயங்களும் இதற்குக் காரணங்களாக அமையலாம். உறவின் போது கணவன் ஒரே மாதிரியான நிலைகளைக் கையாள்வது அல்லது கண்முடித்தனமாக ஈடுபடுவது போன்ற நடவடிக்கைகளாலும் மனைவிக்கு உறவின் மீது வெறுப்பு ஏற்படலாம். இருபத்தைந்து சதவிகிதப் பெண்கள் தாம்பத்திய உறவில் ஈடுபாடு இல்லாமல் இருப்பதாக தெரிவிக்கிறது ஒரு மருத்துவ ஆராய்ச்சி முடிவு.

**கூட்டுக்குடும்பப் பிரச்சினை**

கூட்டுக் குடும்பங்களில் இருக்கிற பெண்கள் பலர் இப்பிரச்சினையால் பாதிக்கப்பட வாய்ப்புகள் உண்டு. நிறையபேர் சூழ இருப்பதால் யாராவது தம்மைக் கவனித்து விடுவீர்களோ என்ற பயத்தில் அந்தரங்க உறவைத் தவிர்க்கவும் வெறுக்கவும் செய்வார்கள். குழந்தை பெற்றுக் கொண்டால் இளமையும் அழகும் போய் விடும் என்று பயப்படும் பெண்கள் அதன் விளைவாக உறவு கொள்வதையே தவிர்ப்பார்கள்.

உடலுறவு என்பது அவர்களைப் பொறுத்தவரையில் கணவன் மட்டுமே சம்பந்தப்பட்ட விடயம் என்று நினைப்பார்கள். இந்நிலையில் அந்தப் பெண் உறவை வெறுக்கவும் மாட்டாள். அதே சமயம் அவளால் அதை முழு இன்பத்துடன் அனுபவிக்கவும் முடியாது. செக்ஸில் நாட்டமில்லாப் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட பெண்களில் சிலருக்கு உச்சக்கட்டம் என்பதே சாத்தியமாகாது.விருப்பமிருந்தாலும் கூட இப் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட பெண்கள் சிலருக்கு உறவுக்கு உடல் இடம் கொடுக்காது. இணங்காது.அதனாலேயே உற்வின் மீது அநாவசிய வெறுப்பு ஏற்படும்.

**எதிர்பார்ப்பு தரும் ஏமாற்றம்**

திருமணத்திற்கு முன்பு ஒவ்வொரு பெண்ணுக்கும் தனக்கு வரப்போகும் கணவன் எப்படி இருக்க வேண்டும் என்ற கனவுகளும் கற்பனைகளும் இருக்கும். திருமணத்திற்குப் பிறகு அந்தக் கற்பனைகள் பொய்யாகும் போது, தனக்கு வாய்த்த கணவனின் குணங்கள் எதிர்பார்ப்பிற்கு எதிராக அமையும் போது தாம்பத்திய உறவில் ஈடுபாடு குறைவதாக தெரிவிக்கிறது அந்த ஆய்வு.

சில குடும்பங்களில் ஆண் குழந்தை பெறும் பெண்களுக்குத்தான் மதிப்பு ஒரு வேளை தனக்கு ஆண் குழந்தை பிறக்காமல் போய் விடுமோ என்ற பயத்தில் உறவிலிருந்து தப்பிக்க ஏதேதோ காரணங்களைச் சொல்லித் தப்பிக்கும் பெண்களும் உண்டு. நாளடைவில் அதுவே நிரந்தரமாகி விடும். கணவனது தோற்றத்தில் திருப்தியில்லாத பெண்களும் தன் கணவனுக்கு தன்னையல்லாத வேறொரு பெண்ணுடன் உறவு உள்ளது என்று தெரிய வரும் பெண்களும் கூட தாம்பத்திய உறவைத் தவிர்ப்பார்கள்.

**கணவன் மீதான வெறுப்பு**

தன் கணவன் தன்னிடம் அன்பாக அனுசரணையாக நடந்து கொள்ளாத பட்சத்திலும் அவனுக்குத் தன்னைத் தவிர வேறு பெண்களுடன் உறவு இருப்பதாகவும் உணரும் பெண்கள் கணவனின் மீதான வெறுப்பைக் காட்ட அவர்கள் நாடும் ஒரே வழி அதுவாகத்தான் இருக்கும். தாம்பத்திய உறவில் நாட்டமின்மை என்பது எல்லாப் பெண்களுக்கும் ஒரே மாதிரி இருப்பதில்லை.சிலருக்கு குறிப்பிட்ட நபர்களுடன் உறவு கொள்ள வேண்டிய வரும் போது நாட்டமின்றிப் போவதும் தனக்கு விருப்பமுள்ளவர்களுடன் உறவு கொள்ளும் போது பிடித்துப்போய் இணங்குவதும் உண்டு.


**அழகு பற்றிய விமர்சனம்**

அதேபோல் தாம்பத்திய உறவின் போது தனது உடல் ஊனங்களும் அழகும் இயலாமையும் தன் கணவனால் அநாகரிகமாக விமர்சிக்கப்பட்டாலோ, குறை கூறப்பட்டாலோ கூட அந்தப் பெண் விரக்தியடைந்து தாம்பத்திய உறவை வெறுக்கிறாள். திருமணமாகிக் குழந்தை பெற்ற பிறகு சில வருடங்களில் தம்பதியருடைக்கிடையேயான நெருக்கம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையக்கூடும்.

திருமணத்திற்கு முன்போ அல்லது திருமணமான புதிதிலோ தன் வாழ்க்கைத் துணையிடம் பிடித்திருந்த ஒரு சில விடயங்கள் காலப்போக்கில் பிடிக்காமல் போகலாம். இதனாலும் உறவில் ஈடுபாடு வெறுப்பு ஏற்படலாம். இதனால் தனக்கு அதில் ஆர்வமே இல்லாதது போல் நடிப்பார்கள். தலைவலி, உடல் வலி, மார்பகங்களில் வலி, மார்பகங்களின் அளவுகளைப் பற்றிய கவலை, மயக்கம் , உறவின் போது ஏற்படும் ஒரு விதப் ப்டபடப்பு, அளவுக்கதிக வியர்வை போன்றவற்றால் பாதிக்கப்படும் பெண்களுக்கு செக்ஸில் வெறுப்பு வருவது சகஜமான ஒரு விடயம்.

தாம்பத்திய உறவில் நாட்டமின்மை என்பது தீர்க்க முடியாத குறையில்லை என்கிறது மருத்துவம். கணவனது பக்குவமான அணுகுமுறை மனைவியிடமான அவனது நடத்தை, உடல் மற்றும் மன சுகாதாரம் போன்றவையும் இப்பிரச்சினையைக் குணமாக்கும் சிகிச்சைகளில் முக்கியமாம். மருத்துவரிடம் கேட்கத் தயங்கிக் கொண்டு இதை அப்படியே விட்டு விடுவது தவறு என்கின்றனர் உளவியலாளர்கள்.

## சீனர்களின் நம்பிக்கை



அட்சய திரிதியை அன்று தங்கம் வாங்குவது,பாவத்தை தொலைக்க புண்ணிய தலங்களில் நீராடுவது போன்ற நம்பிக்கைகள் நம் ஊர் மக்களிடம் உள்ளது.சீனர்கள் மட்டும் நம்மவர்களுக்கு சளைத்தவர்களா?அவர்களிடமும் இது போன்ற ஏராளமான நம்பிக்கைகள் புரையோடிப் போய் இருக்கின்றன.

சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் சுஸ்குய் என்ற நகரம் உள்ளது.இங்கு ஆறு ஒன்றின் குறுக்கே கட்டப்பட்ட 200 ஆண்டு பழைமையான பாலம் ஒன்றும் உள்ளது.இதன் பெயர் தாய்பிங் பாலம்.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 24 ஆம் திகதி இந்தப் பாலமும் அதன் சுற்றுப் புறமும் களை கட்டிவிடும்.சுற்றுப்புற பகுதியைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல சீனா முழுவதும் இருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் இங்கு தங்களது குடும்பத்தினருடன் கூடுவர்.பாலத்தின் மீது ஏறி நின்று கையோடு தாங்கள் கொண்டு வந்த பழைய ஆடைகளையும் நாணயங்களையும் ஆற்று நீரில் வீசி எறிந்துவிட்டு ஊருக்கு திரும்புவர்.குறிப்பிட்ட அந்த நாளில் தாய்பிங் பாலம் திருவிழாக் கோலம் பூண்டிருக்கும்.

அது சரி...பழைய உடைகளையும் நாணயங்களையும் ஆற்று நீரில் வீசி எறிந்தால் என்ன கிடைக்கும் என்று தானே கேட்கிறீர்கள்? 'நோயற்ற மகிழ்ச்சியான வாழ்வு வேண்டுமானால் உடைகளையும் நாணயங்களையும் வீசி எறிய வேண்டும் என்பது எங்களின் முன்னோர் நம்பிக்கை.அதைத்தான் நாங்கள் பின்பற்றுகிறோம்...' என்கின்றனர் சீன மக்கள்.மார்ச் மாதம் நடந்த இத்திருவிழாவில் கலந்து கொண்ட மக்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா?இரண்டு இலட்சம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பணத்துக்காக அலையும் அஜித்



பணம் பணம் பணம்னு அலையும் அஜித் என்ற தலைப்பை பார்த்ததும் அதிர்ச்சியடைந்து விடாதீர்கள். இரசிகர்களே! மங்காத்தா படத்தில் வரும் 2 அஜித்களில் ஒரு அஜித்தின் வேடம் தான் இது! மங்காத்தா படம் குறித்து அஜித் அளித்துள்ள பேட்டியொன்றில்தான் இந்த தகவலை வெளியிட்டிருக்கிறார். தனது 50 ஆவது படமான மங்காத்தா பற்றி அஜித் அளித்துள்ள பேட்டியில் வெங்கட் பிரபு ஒரு தொழில் முறை இயக்குநர்.மிக மிக பக்குவமானவர். அவரோடு பணியாற்றிய நாட்கள் இனிமையானவை. அனைவரையும் அனுசரித்து வேலை வாங்குவதில் வெங்கட்டுக்கு நிகர் யாருமில்லை. நான் இதுவரை வேலைபார்த்த இயக்குநர்களிலேயே சிறந்தவர் என்றால் வெங்கட்டைத் தான் சொல்வேன். இந்தப் படத்தில் நான் விநாயக் மாதவன் என்ற பாத்திரத்தில் வருகிறேன்.பணம் பணம் பணம் என்று பணத்தையே குறியாகக் கொண்ட வேடம் அது. இதுவரை நீங்கள் பார்த்திராத ஒரு மோசமான வேடம் அது. நிச்சயம் உங்களை ஆச்சரியப்படுத்தும்.இன்னொரு வேடம் பொலிஸ் என்று கூறியுள்ளார்.

இயக்குநர் பாலாஜி சக்திவேலின் புதிய படம் வழக்கு எண். கல்லூரி படத்துக்குப் பிறகு பல வருட உழைப்பில் தயாராகியிருக்கிறது. லிங்குசாமியின் திருப்பதி பிரதர்ஸ் தயாரித்திருக்கும் இப்படத்தின் உரிமையை யு டி.வி. வாங்கியுள்ளது. திரையுலகினர் இந்தப் படத்தை ஆர்வமாக எதிர்நோக்கியுள்ளனர். பாலாஜி சக்திவேலின் பல வருட உழைப்பில் வழக்கு எண் தயாராகியுள்ளது முக்கியமானது. தற்போது படத்தின் ட்ரெய்லரை வெளியிட்டுள்ளனர். இரு ஜோடி காதலர்களின் கதையிது எதிர்பார்த்த திருப்பங்களும் உண்டு. முந்தைய படங்களைப் போல அறிமுகங்களை வைத்து படத்தை உருவாக்கியுள்ளார். காதல், கல்லூரி போல் இதுவும் நிஜக் கதை என்பது கூடுதல் தகவல்.

## போலிச்சாமியார்களை தோலுரிக்கும் வெங்காயம்



பெரியார் அடிக்கடி பிரயோகித்த வார்த்தை வெங்காயம். அது ஏதோ கெட்ட வார்த்தை என்று பலரும் நினைத்ததுண்டு.ஆனால், அந்த வெங்காயம் என்ற வார்த்தைக்குள் எத்தனை பெரிய தத்துவத்தை பெரியார் புரிய வைத்தார் என்பதை பின்னர்தான் அனைவரும் புரிந்து கொண்டனர்.இன்றைய தலைமுறையினருக்கு பெரியாரின் கொள்கைகளை புரட்சிக் கருத்துகளை எடுத்துச் சொல்ல ஒரு படத்தை தயாரிக்கிறார்கள்.அந்தப் படத்தின் தலைப்பு 'வெங்காயம்'. போலிச் சாமியார்களின் முகத்திரையை கிழிக்கும் காட்சிகள் இந்தப் படத்தில் ஏராளம் உள்ளனவாம்.தமிழ் சினிமாவில் பெரியாரின் கொள்கைககளைப் பேசி வருபவரும் அவர் வேடத்தில் நடித்து பாராட்டுகளைப் பெற்றவருமான சத்யராஜ் தான் இந்தப் படத்தின் நாயகன். சங்ககிரி ராஜ்குமார் இயக்குகிறார். இந்தப் படத்தின் இசை வெளியீட்டு விழா சமீபத்தில் சென்னையில் நடந்தது. முதல் சீடியை துப்புரவு தொழிலாளர் ஜானய்யா வெளியிட, ஏழுமலை என்ற விவசாயி பெற்றுக் கொண்டார். நிகழ்ச்சியில் சத்யராஜ் பேசுகையில்; 'வெங்காயம்' படம், 'போலிச் சாமியார்களின் முகத்திரையை கிழிக்கிற படம்' என்றார். ஈழத்துக் கவிஞர் காசி ஆனந்தன் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று, ஈழப்போரின்போது தமிழருக்கு நிகழ்ந்த கொடுமைகள் குறித்துப் பேசினார். இயக்குநர் கௌதமன் பேசும்போது, 'வெங்காயம்,பெரியார் கொள்கைகளை சித்திரிக்கும் படம். பெரியார் படத்தை போட்டு கட்சி நடத்தும் அரசியல் கட்சிகள், இந்த படத்தை வாங்கி திரைக்கு வருவதற்கு உதவ வேண்டும்' என்றார். திராவிடர் இயக்க தமிழர் பேரவை தலைவர் சுப.வீரபாண்டியன், படத்தின் தயாரிப்பாளர் எஸ்.எம்.மாணிக்கம்,இயக்குநர் சங்ககிரி ராஜ்குமார் ஆகியோரும் பேசினார்கள்.

## Saturday சினிமா

### 15 வயது நாயகி



எனக்கு படிப்பை விட. நடிப்புத்தான் முக்கியம் என்று 8 ஆம் வகுப்பு வரை படித்திருக்கும் நாயகி ஒருவர் கூறியிருக்கிறார். அவர் பெயர் லட்சுமி மேனன். 15 வயதாகும் இவர் பிரபு சாலமன் இயக்கத்தில் உருவாகி வரும் கும்கி படத்தில் விக்ரம் பிரபுவுக்கு ஜோடியாக நடிக்கிறார். கொச்சிதான் சொந்த ஊர். 8 ஆம் வகுப்பு வரை படித்திருக்கும் லட்சுமி மேனன் நேரம் கிடைத்தால் படித்துக் கொள்ளலாம்; கலைசேவை தான் முக்கியம் என்று முடிவெடுத்ததால் நடிப்பதற்கு வந்து விட்டாராம்.இது பற்றி அவர் கூறுகையில்; எனக்கு படிப்பதை விட நடிப்பதில்தான் விருப்பம். என் பெற்றோரும் அதே முடிவை எடுத்ததால் இங்கே நடிக்க வந்[illegible]கிறேன். இதற்கு முன் ஒரு மலையாளப் படத்தில் நடித்திருக்கிறேன்.இயக்குநர் விநயன் இயக்கத்தில் வெளியான அந்த படத்தில் சின்ன வேடம் என்பதால் பெரிதாக பேசப்படவில்லை.ஆனால் அந்த படத்தால் கோடம்பாக்கத்துக்கு வர முடிந்தது என்கிறார்.

### அம்மாவும் பொண்ணும்





மலையாளத்திலிருந்து அம்மாவும் பொண்ணும் ஒரேநேரத்தில் தமிழ் சினிமாவில் அறிமுகமாகின்றனர். மலையாள படவுலகில் முன்னாள் கதாநாயகியாக திகழ்ந்தவர் நடிகை ஊர்மிளா.இவர் தமிழில் சோனியா அகர்வால் நடித்து வரும் 'ஒரு நடிகையின் வாக்கு மூலம்' படத்தில் சோனியா அகர்வாலுக்கு அம்மாவாக நடிப்பதன் மூலம் தமிழுக்கு வருகிறார். அதேபோல் இவரது நிஜ மகளான உத்ரா உன்னி, 'அரசு', 'கம்பீரம்' போன்ற படங்களின் இயக்குநர் சுரேஷ் இயக்கும் 'வவ்வால் பசங்க' படத்தில் கதாநாயகியாக தமிழில் அறிமுகமாக உள்ளார்.ஒரேநேரத்தில் அம்மாவும் பொண்ணும் தமிழில் அறிமுகமாகின்றனர். இவர்களது வரவு எப்படி இருக்கும் என்று சற்று பொறுத்திருந்து பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமாவில் தொடர்வேன் – நயன்தாரா



ராம ராஜ்ஜியம் படப்பிடிப்பின் இறுதிநாளில் நான் உணர்ச்சி வசப்பட்டு அழுதது உண்மைதான். ஆனால், சினிமாவிலிருந்து விலகப்போவதற்காக நான் அழுததாக அர்த்தப்படுத்திக் கொள்ள வேண்டாம் என நயன்தாரா கூறியுள்ளார். நயன்தாராவுக்கும் பிரபுதேவாவுக்கும் விரைவில் திருமணம் நடக்க உள்ளது. திருமணத்துக்கு பின் நயன்தாரா நடிக்க மாட்டார் என செய்திகள் பரவி உள்ளது. தெலுங்கில் நயன்தாரா கடைசியாக நடித்த ராம ராஜ்ஜியம் படத்தின் படப்பிடிப்பு சில தினங்களுக்கு முன் முடிந்தது. படப்பிடிப்பின் கடைசி நாளில் அவர் கதறி அழுததும், படக்குழுவினர் அனைவரிடமும் பிரியாவிடை பெற்றதும் அண்மைக்கால செய்திகள்.இது அழுகையும் பிரியாவிடையும் சினிமாவுக்கும் சேர்த்துத் தான் என்று கூறப்பட்டது. அப்போது செய்திகளுக்கு மறுப்பு தெரிவிக்காமல் இருந்த நயன்தாரா, இப்போது சினிமாவை விட்டு நான் விலகமாட்டேன் என்று கூறியுள்ளார்.இது குறித்து அவர் கூறுகையில்; 'நான் சினிமாவை விட்டு விலகப்போவதான வந்த செய்தியில் உண்மையில்லை. ராம ராஜ்ஜியம் படப்படிப்பில் அழுததற்கான காரணமே வேறு, என்னையும் மீறி என் மனவேதனை கண்ணீராய் வெளிப்பட்டுவிட்டது. இன்னொரு பக்கம் ர்ாம ராஜ்ஜியம் படப்பிடிப்புக் குழுவினர் பாட்டு பாடி என்மேல் பூக்களை தூவி வழியனுப்பினார்கள். என் அழுகைக்கு அதுவும் ஒரு காரணம். கடந்த ஆண்டு நான் நடித்த எல்லாப் படங்களும் சூப்பர் வெற்றி. நான் எதற்கு விலகப்போகிறேன்' என்றார்.

கமல் படங்களை தொடங்குவதும் முடிப்பதும் அனேகமாக வெளியே தெரிவதில்லை. படத்துக்கு தேவையான கச்சா பொருட்கள் அனைத்தும் முந்தைய படத்தின் போதே தயாராகிவிடும்.விஸ்வரூபம் விதிவிலக்கு. படத்தின் பட்ஜெட் 100 கோடி என்று மிரட்டுகிறார்கள். செல்வராகவன் விலகிய பிறகு இயக்குநர் பொறுப்பும் கமலின் தோள்களில். காட்சி இடங்கள் படத்தின் முக்கிய பங்கு வகிப்பதால் கனடா, அமெரிக்கா, ஐரோப்பா என கிட்டத்தட்ட பாதி உலகை வலம் வந்திருக்கிறார். இதற்கே பல இலட்சம் செலவு. படத்திலிருந்து செல்வராகவன் விலகிய பிறகு படத்தின் வசனத்தில் மாற்றங்களை கமல் செய்துள்ளதாக தெரிவிக்கின்றனர். தனது உலகப் பயணத்தின் போது இந்த மாற்றங்களை கமல் சரி செய்துள்ளார். இப்போது வசனம் பக்காவாக முழுமை பெற்றிருக்கிறது. கமலின் இப்போதைய பிரச்சினை நாயகி. சோனாக்சி சின்கா விலகியதால் வேறொரு நாயகியை தேடும் நிலை. தசாவதாரத்தில் கமல் சொல்வதைப் போல ஆளும் அழகா இருக்கணும்,அதே நேரம் பொலிவூட் நடிகையாகவும் இருக்கணும்.தீபிகா படுகோன் ஓகே. ஆனால் அவரிடமிருந்து பச்சை சிக்னல் கிடைக்குமா என்பது தான் பிரச்சினை.

## விஷாலுக்கு காத்திருக்கும் இயக்குநர்

தீராத விளையாட்டுப் பிள்ளை படத்தில் நடித்தாலும் நடித்தார் விஷாலின் இந்தப் படம் கோடம்பாக்கத்தையே சிறைக்குள் தள்ளி செக்கிழுக்க வைக்கும் போலிருக்கிறது. சன் டி.வி.சக்சேனா முதல், தியேட்டரில் வேலை செய்யும் சாதாரண ஊழியன் வரை இப்படத்தின் வசூல் நிலைவரங்களால் தான் பொலிஸ் ஸ்டேஷனை மிதித்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு இலட்சணத்தையும் அறிந்த பின்புதான் செய்கிறாரா, அல்லது அறியாமல் அடம் பிடிக்கிறார்ா என்றே தெரியவில்லை. எனது அடுத்த படத்தையும் திருதான் இயக்க வேண்டும் என்று ஒற்றைக் காலில் நிற்கிறாராம் விஷால். என்னை சிம்பு கூப்பிட்டாக, கார்த்தி கூப்பிட்டாக, ஜீவா கூப்பிட்டாக. ஆனால் அத்தனை பேரையும் விட்டுட்டு உங்க படத்தை இயக்கணும்னு தான் காத்திருக்கேன் என்று திரு சொன்னதாகவும் அதை கேட்டுத் தான் விஷால் விழுந்ததாகவும் கூறுகிறார்கள் இன்டஸ்ரியில்.அதே நேரத்தில் விஷாலுக்கும் பூபதி பாண்டியனுக்கும் இருந்து வந்த பிணக்கு சரி செய்யப்பட்டு விட்டதாகவும் விஷாலின் அடுத்த படம் அவருடன் தான் என்றும் சொல்கிறார்கள்.

கரண் நடிப்பில் தயாரான கந்தா சென்ற மாதம் வெளியாகியிருக்க வேண்டும்.சில ஏரியாக்கள் இன்னும் விலை போகவில்லை.அதனால் பட வெளியீட்டை தள்ளிவைத்தனர்.ஆனாலும் நிலைமையில் முன்னேற்றம் இல்லை. இந்நிலையில் கரண் நடித்த மற்றொரு படமான தம்பி வெட்டோத்தி சுந்தரத்தின் பாடல்கள் வெளியீட்டை பிரமாண்டமாக நடத்தி முடித்துள்ளனர். வித்யாசாகர் இசையமைத்திருக்கும் இந்தப் படத்தை வடிவுடையான் இயக்கியுள்ளார்.கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவரான வடிவுடையான் தனது சிறு வயதில் கேள்விப்பட்ட தாதா வெட்டோத்தி சுந்தரத்தின் கதையைத்தான் அதே பெயரில் எடுத்துள்ளார். படத்தில் கள்ளச் சாராயம், கட்ட பஞ்சாயத்து என பல சமுக விரோத செயல்களில் ஈடுபட்டிருப்பினும் இதுவரை வெட்டோத்தி சுந்தரத்தின் பெயரில் வழக்கு எதுவும் பதிவு செய்யப்பட்டதில்லை என்பது முக்கியமானது. கரண் வெட்டோத்தி சுந்தரமாக நடிக்க அவரது காதலி லூசிவாக அஞ்சலி நடித்துள்ளார்.



அமலா போல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவரெஸ்ட் சிகர சரித்திரத்தில் இடம்பிடித்த வயதான பெண்

பிரேமலதா அகர்வால் 45 வயதாகும் இவர் இரண்டு பெண்களுக்கு தாய். இவரது மூத்த பெண்ணுக்கு திருமணமாகிவிட்டது.எப்போது வேண்டுமானாலும் பாட்டி என்ற அந்தஸ்து கிடைக்கலாம்.சரி இந்த விபரம் எல்லாம் எதற்காக என்கிறீர்களா? இளைஞர்கள் பலர், ஏற முயன்று முடியாமல் உயிரைக் கொடுத்துள்ள உலகின் உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் இந்த வருடம், மே 11 ஆம் திகதி ஏறி சாதனை படைத்துள்ளார். அந்த வகையில் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய இந்தியாவின் வயதான பெண் என்ற சாதனையையும் பெற்றுள்ளார்.

இத்தனைக்கும் இவர் எவரெஸ்ட் சிகரம் ஏறும் போது ஏற்பட்ட சோதனைகள் ஏகப்பட்டவை. எவரெஸ்ட் சிகரம் ஏறுவதற்காக அடிவாரத்தில் குழுமிய போது, இவரது குழுவில் இடம் பெற்றிருந்தவர்கள் இவரை கிண்டலும் கேலியும் செய்துள்ளனர். ஒரு சிலர் ஏன் இந்த வீண் முயற்சி பேசாமல் இப்படியே திரும்பி விடுங்கள்... என்று சொல்லி எச்சரித்துள்ளனர்.ஆனால் அப்படிச் சொன்னவர்கள் தான் ஒரு கட்டத்திற்கு மேல் ஏற முடியாமல் திரும்பி விட்டனர். 23 ஆயிரம் அடிக்கு மேல் காற்று கிடையாது. செயற்கை சுவாசம் தான் துணை.இந்த செயற்கை சுவாசத்தின் துணையோடு, மேலும் 6000 அடி ஏற வேண்டும். இன்னும் கொஞ்சம் உயரம் போனதும் மைனஸ், 100-150 செல்ஸியஸ் வரை குளிர் காணப்படும். இவர் போன போது உச்சபட்ச குளிர் நிலவியது. இன்னும் கொஞ்சம் தூரத்தில் சிகரத்தை தொடப்போகிறோம் என்ற நிலையில் கையில் இருந்த கையுறை கழண்டு விழுந்து காணாமல் போனது. எலும்பையே உருக்கும் குளிருக்கு முன் விரல்கள் எம்மாத்திரம் என்ற நிலையில் திரும்ப கையுறை கிடைக்கப் பெற்றார்.




இப்படிப்பட்ட சோதனைகளை எல்லாம் தாண்டி, எவரெஸ்ட் சிகரத்தைத் தொட்டு திரும்பி இருக்கிறார். இவர், நாற்பது நாள் ஒட்டகத்திலேயே பாலைவனப் பயணம் மேற்கொண்டு, 'லிம்கா' உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளார். இவரது பொழுது போக்கே மலை ஏறுவதுதான். எவரெஸ்ட் சிகரம் ஏற வேண்டும் என்பது இவரது கனவாக இருந்தது. அந்தக் கனவு நிறைவேற நிறைய செலவு செய்ய வேண்டும். பின்தங்கிய ஜார்கண்ட் மாநிலத்தின் ஜாம்ஷெட்பூரைச் சேர்ந்த சாதாரண குடும்பத் தலைவியான இவருக்காக செலவு செய்ய இப்போதுதான் டாடா ஸ்டீல் நிறுவனம் முன் வந்தது. இதையடுத்து இப்போது அவரது கனவு நனவாகியுள்ளது. சாதனை செய்ய வயது ஒரு தடையில்லை என்று நிரூபித்துள்ள இவர், இப்போது சாதனைப் பெண் மட்டுமல்ல. எவரெஸ்ட் சிகரத்தின் சரித்தித்திலும் இடம் பெற்ற பெண்ணாகிவிட்டார்.



# நீடித்த ஆயுளுக்கு தாம்பத்யம்



ஆரோக்கியமான தாம்பத்ய வாழ்க்கை மூலம் நீடித்த ஆயுளைப் பெற முடியும் என்று சமீபத்திய ஆய்வு ஒன்றில் தெரிய வந்துள்ளது.

நம்பிக்கைக்குரிய ஒருவருடன் மட்டும் தொடர்ந்து தாம்பத்ய உறவில் ஈடுபட்டு வருவோருக்கே இது பொருந்துமாம். அதேசமயம், பல்வேறு பெண்களுடன் சகட்டு மேனிக்கு உறவு கொள்வோருக்கு இது சற்றும் பொருந்தாது என்று இத்தாலியைச் சேர்ந்த ஆய்வாளர் இமானுவேல் ஜனினி தெரிவித்துள்ளார்.

உறவுகொள்ளும் பெண் மீது மிகுந்த நம்பிக்கையும் பூரண திருப்தியும் வைத்திருக்கும் ஆண்களுக்கு செக்ஸ் வாழ்க்கை இனிதாக அமைகிறது. இப்படிப்பட்டோர் தொடர்ந்து செக்ஸ் வாழ்வில் ஆர்வத்துடன் ஈடுபடுகின்றனர். இதனால் அவர்களுக்கு இதயக் கோளாறுகள் வருவது குறைகிறது. வாழ்நாளும் நீடிக்க வாய்ப்பு ஏற்படுகிறது என்றும் ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.


முறையான செக்ஸ் வாழ்க்கையில் ஈடுபட்டிருப்போருக்கு இதயநோய்கள் ஏற்படுவதில்லை என்பதால் மாரடைப்பு எட்டிப்பார்ப்பதில்லை. இதன் மூலம்தான் அவர்களுக்கு ஆரோக்கியமான உடல்நலமும் நீடித்த ஆயுளும் சாத்தியமாகிறதாம்.

செக்ஸ் உறவில் தொடர்ந்து அதிக அளவில் ஈடுபடும்போது ஆண்களுக்கு டெஸ்டோஸ்டிரான் உற்பத்தி அதிகரிக்கிறது. தொடர்ந்து அதிகரித்த அளவிலும் உள்ளது. இதன் மூலம் மன அழுத்தம் அவர்களுக்குக் குறைகிறது. இது உடலை சிறப்பாக வைக்க உதவுகிறது என்கிறார் ஜனினி.

ஆண்களுக்கு செக்ஸ் உறவின்போது உற்பத்தியாகும் டெஸ்டோஸ்டிரான் மிகவும் நன்மை பயக்கக்கூடியது. தேவையில்லாத சீனியை அது குறைக்கிறது. இது இருதயத்திற்கு மிகவும் நல்லது. குறிப்பாக நீரிழிவு வியாதி உள்ளவர்கள் அதிக அளவில் உடலுறவுகளில் ஈடுபடுவதை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். அது அவர்களது சீனி அளவைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவுகிறது என்கிறார் ஆய்வாளர்.

உடல் தேவைக்காக மட்டுமே பல்வேறு பெண்களுடன் செக்ஸ் உறவு கொள்வோருக்கு மன அழுத்தம் அதிகரிக்கிறதாம். குறிப்பாக கள்ளக் காதலில் ஈடுபடுவோருக்கு மன அழுத்தம் மிக அதிகமாக இருக்குமாம். யாருக்காவது தெரிந்து விடுமோ என்ற பயத்திலும் பதற்றத்திலும் இருப்பதால் அவர்களுக்கு மன அழுத்தம் அதிகரிப்பதோடு இருதயக்கோளாறுகளும் சீக்கிரமே வந்து சேருகிறதாம்.

உடல் ஆரோக்கியம் கருதித்தான் நமது முன்னோர்கள் பிறன் மனை நோக்குவதைப் பாவம் என்று தெரிவித்திருக்கின்றனர்.



# சார்ள்ஸ் மீது குற்றச்சாட்டு

பிரிட்டனில் அரசின் அன்றாட நடவடிக்கைகளில் செயல்பாடுகளில் அரண்மனை தலையிடுவதில்லை.இது ஒரு மரபு.மன்னர் குடும்பம் அரசிலிருந்து விலகியே இருக்கும்.

ஆனால் "அரசியல் சட்ட விதிமுறைகள் விதித்திருக்கும் எல்லைக் கோடுகளை மீறி இளவரசர் சார்ள்ஸ் பிரிட்டிஷ் அரசின் கொள்கைகளில் செல்வாக்கு செலுத்த முயன்றார்" என்ற புதிய ஒரு குற்றச்சாட்டை அரியணைக்கான வாரிசு மீது சுமத்தியிருக்கிறார் காம்ப் பெல். இவர் ரொனி பிளேயர் பிரதமராக இருந்தபோது தகவல் தொடர்புத் துறை இயக்குநராகப் பணியாற்றியவர்.

"ரொம்ப ஓவராகவே போனார் இளவரசர்.நரிகளை வேட்டையாடக் கூடாது என்று அரசு கொண்டு வந்த தடை உள்ளிட்ட பல்வேறு கொள்கை முடிவுகளை தன் ரோயல் செல்வாக்கால் மாற்ற முயன்றார்.இது ரொனி பிளேயருக்கு எரிச்சலைத் தந்தது.ஒரு கட்டத்தில் மகாராணியிடமே கூட சார்ள்ஸ் மீது பிளேயர் புகார் தந்தார்" என்கிறார் காம்ப் பெல்.

சமீபத்தில் இவரது டையரி தொகுப்புகளிலிருந்து இந்த விபரங்கள் கசிந்திருக்கின்றன.அரச குடும்பத்தை நாங்கள் மதிக்க வேண்டியது தான்.மதிக்கவும் செய்கிறோம்.ஆனால் எந்த அளவுக்கு அரசியலில் அரண்மனை தன் மூக்கை நுழைக்கலாம் என்பதற்கும் ஓர் எல்லை உண்டு.அதை அப்பட்டமாக மீறினார் சார்ள்ஸ்.

இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்பது மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு இந்த வேல்ஸ் இளவரசர் செய்திருக்கும் வேலைகள் ரொனி பிளேயர் அரசை ரொம்பவும் கவலைப்பட வைத்தது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வார மெயிலில் இவர்...



# ரூபேர்ட் மேர்டொக்

அமெரிக்கா,ஐரோப்பா,அவுஸ்திரேலியா,ஆசியா மற்றும் இலத்தீன் அமெரிக்கா என வியாபித்திருக்கும் ஓர் ஊடக சாம்ராஜ்ஜியத்தின் சக்கரவர்த்தியே 80 வயதான ரூபேர்ட் மேர்டொக்.

'நியூஸ் கோர்ப்ரேஷன்' எனும் குடையின் கீழ் உலகளாவிய ரீதியில் பல கிளைகளைக் கொண்ட இவரது சாம்ராஜ்ஜியம் நூற்றுக் கணக்கான பத்திரிகைகள்,தொலைக்காட்சிகள்,செய்மதி மற்றும் கேபிள் சேவைகள் என்பவற்றை தனவசம் வைத்துள்ளது.

இவரது நிறுவனமானது அவுஸ்திரேலியாவில் 146 பத்திரிகைகளை வெளியிட்டுவரும் அதேவேளை, பிரிட்டனில் 'ரைம்ஸ்', 'சண்டே ரைம்ஸ்', 'சண்', 'நியூஸ் ஒவ் த வேள்ட்' உள்ளிட்ட பல குறுஞ்செய்தி மற்றும் வாராந்தப் பத்திரிகைகளையும் அமெரிக்காவில் 'வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல்', 'நியூயோர்க் போஸ்ட்', 'டௌ ஜோன்ஸ் நியூஸ்வயர்' உள்ளிட்ட பத்திரிகைகளையும் வெளியிட்டு வருகிறது.

இவை தவிர பொக்ஸ் ரி.வி,ஸ்டார் ரி.வி,ஸ்கை இத்தாலியா மற்றும் பிரிட்டிஷ் ஸ்கை புரோட்காஸ்டிங்கின் 39 வீதமான பங்கு உள்ளிட்ட பல செய்மதி தொலைக்காட்சி சேவைகளும் மேர்டோக்கின் சாம்ராஜ்ஜியத்திற்கு சொந்தமானதாகும்.

இந்நிலையில்,இவரது பிரிட்டிஷ் நிறுவனமான 'நியூஸ் இன்ரர்நஷனலினால்' வெளியிடப்பட்ட 'நியூஸ் ஒவ் த வேள்ட்' எனும் வாராந்த குறுஞ்செய்தியில் பத்திரிகையானது தொலைபேசி உரையாடல்களை ஒற்றுக் கேட்டு பரபரப்பாக செய்திகளை வெளியிட்டு வந்தமை அம்பலமானதைத் தொடர்ந்து இவரது சாம்ராஜ்ஜியமே ஆட்டம் கண்டுள்ளது.

1931 இல் அவுஸ்திரேலியாவில் பிறந்த மேர்டொக் ஒக்ஸ்போர்ட் பட்டதாரியாவார்.

அவுஸ்திரேலியாவில் புகழ் பெற்ற ஊடக நிறுவனத் தலைவர்களில் ஒருவரான சேர் கீத்தின் மகனான மேர்டொக் தந்தையின் மரணத்தைத் தொடர்ந்து தனது 22 ஆவது வயதில் ஊடக உலகுக்குள் கால் பதித்தார்.

தந்தை விட்டுச் சென்ற இரு பத்திரிகைகளின் 50 வீதப் பங்குடன் தனது தொழில் வாழ்க்கையை ஆரம்பித்த மேர்டொக் மிக வேகமாக தொழிலின் உச்சத்தை எட்டினார்.

மிக விரைவாக ஏனைய கண்டங்களிலும் தனது இராஜ்ஜியத்தை விரிவுபடுத்திய மேர்டோக் 1969 இல் பிரிட்டனில் பல இலட்சம் பிரதிகள் விற்பனையாகும் முன்னணிப் பத்திரிகைகளில் ஒன்றான 'நியூஸ் ஒவ் த வேள்ட்டை' தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தார்.

இதனைத் தொடர்ந்து 1986 களில் ரைம்ஸ்,சண்டே ரைம்ஸ் ஆகிய பத்திரிகைகளையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த மேர்டொக் செய்மதி தொலைக்காட்சி வலையமைப்பிலும் கால்பதித்தார்.

இதற்கிடையில் 1980களில் இவரது சாம்ராஜ்ஜியம் சில சரிவுகளை எதிர்கொண்டிருந்த நிலையில்,ஆசியா முழுவதற்கும் செய்மதி ஒளிபரப்புகளை மேற்கொள்ளும் ஹொங்கொங்கின் 'ஸ்டார் ரிவி'யை கையகப்படுத்தியதன் மூலம் [illegible] வெற்றிகரமாக சமாளித்தார்.

இவ்வாறு மேர்டொக்கின் சாம்ராஜ்ஜியம் உலகெங்கும் கொடி கட்டிப் பறந்து கொண்டிருக்கையிலேயே 'நியூஸ் ஒவ் த வேள்ட்'டின் ஒற்றுக் கேட்டல் விவகாரம் கடந்த செப்டம்பரில் அம்பலமானது.

அரசியல்வாதிகள்,முக்கியஸ்தர்கள் மற்றும் பிரபலங்களின் தொலைபேசி உரையாடல்கள் மட்டுமல்ல ஈராக் ஆப்கானிஸ்தானில் உயிரிழந்த வீரர்களின் குடும்பங்களின் மற்றும் கடத்திக் கொலை செய்யப்பட்ட சிறுமியொருவர் குறித்த உரையாடல்கள் என்பனவும் ஒற்றுக் கேட்கப்பட்டு பரபரப்பாக செய்திகள் வெளியிடப்பட்டன.

இவ்வாறு 4 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களின் உரையாடல்கள் ஒற்றுக் கேட்கப்பட்டதாகக் கருதப்பட்டதைத் தொடர்ந்து எழுந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்கு 168 வருடங்கள் பழைமை வாய்ந்த நியூஸ் ஒவ் த வேள்ட்டிற்கு மேர்டொக் மூடுவிழா நடத்தினார்.

ஆனாலும் சர்ச்சை முடிவடைவதாக இல்லை.இப்பத்திரிகையின் செய்தியாளர்களுக்கும் பொலிஸ் மற்றும் அரச உயர்மட்டத்திலிருப்பவர்களுக்குமிடையிலான தொடர்புகள், ஒற்றுக் கேட்டலுக்காக பொலிஸாருக்கு இலஞ்சம் வழங்கியமை உட்பட நாளாந்தம் வெளிவரும் புதுப்புது தகவல்களால் நெருக்கடி அதிகரிக்கின்றதே தவிர குறைவடைவதாகக் காணோம்.

இவ் விவகாரம் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூனுக்கும் சிக்கல்களை ஏற்படுத்தியுள்ள நிலையில், பாராளுமன்ற [illegible] விசாரணைகளையும் மேர்டொக் எதிர்கொள்ள நேர்ந்தது.

இந்நிலையில் பாராளுமன்றத்திலும் ஏனைய பத்திரிகைகளின் மூலமான முழுப்பக்க விளம்பரங்களின் மூலமும் தவறுக்காக மன்னிப்பு கோரிய மேர்டொக் இவ்விவகாரம் சர்ச்சைக்குள்ளாகும் வரை இது பற்றி தனக்குத் தெரியாதெனக் கூறி தனது பொறுப்பிலிருந்து நழுவும் முயற்சியையும் மேற்கொண்டுள்ளார்.

இதேவேளை, பாதிக்கப்பட்டவர்களுக்கு கோடிக்கணக்கில் நஷ்டஈடு வழங்க வேண்டி வரலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இவ் விவகாரம் கடுமையாக எதிரொலித்துக் கொண்டிருக்கும் நிலையில், அவுஸ்திரேலிய,அமெரிக்க அரச வட்டாரங்களும் அங்குள்ள மேர்டொக்கின் நிறுவனங்கள் மீதான விசாரணைகளுக்கு அழைப்பு விடுத்து வருகின்றன.

நாளுக்கு நாள் நெருக்கடிகள் அதிகரித்து வரும் நிலையில் இவ் ஊடக சாம்ராஜ்ஜியத்தின் சக்கரவர்த்தியாக மேர்டொக்கினால் தொடர்ந்தும் கோலோச்ச முடியுமா என்பதே தற்போது அனைவர் மத்தியிலும் எழுந்துள்ள கேள்வியாகும்.


சுமார் அரை நூற்றாண்டுக்கும் மேலாக உதயங்களை மட்டுமே கண்டு வந்த மேர்டொக்கின் இராஜ்ஜியம் இன்று அஸ்தமனத்தை நோக்கி அடியெடுத்து வைத்திருப்பது மேர்டொக்கிற்கு மட்டுமல்ல ஊடகத்துறைக்கு துரதிர்ஷ்டமே.

ச.துஷ்யந்தினி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலத்தில் கம்பியூட்டர் திட்டும்



சில நேரங்களில் நமது வேகத்துக்கு நம்முடைய கம்பியூட்டர் ஈடுகொடுக்காமல் போகிறது.அப்போதெல்லாம் ஆத்திரத்துடன் கீ போர்டை தடதடவென்று தட்டுகிறோம்.தட்டென்று சுவிட்சை அழுத்தி அணைக்கிறோம்.ஆனால்,எதிர்காலத்தில் அப்படிச் செய்வதற்குக் கொஞ்சம் யோசிக்கவேண்டும்.கம்பியூட்டர் உங்களைத் திருப்பித் திட்டக்கூடும்.

இன்னும் சில ஆண்டுகளில் இந்நிலை ஏற்பட்டுவிடும் என்கிறார்கள் கணினி வல்லுநர்கள்.ஆர்ட்டிபீஷியல் இன்டெலிஜென்ஸ் கொண்ட அந்த கம்யூட்டர்கள் நம்முடன் உரையாடித் தகவல்களைப் பெறும் விவாதமும் செய்யும்.


இவ்வாறு கணினியைப் பயன்படுத்துவோருடன் பேசும் கம்யூட்டரை உருவாக்குவதற்கான தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் பெரிய புராஜெக்டில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.இந்த செயற்கை அறிவுக் கணினி,பயன்பாட்டாளரின் குரலை இனங்கண்டு கொள்ளும் மனிதர்களைப் புரிந்துகொள்ளச் செய்வதும் தேவையான விதத்தில் பேசச் செய்வதும் மனிதர்களைப் போல நடந்துகொள்ளச் செய்வதும்தான் இந்தத் தொழில்நுட்பத்தின் உச்சபட்ச இலட்சியம்.

இங்கிலாந்து ஆய்வாளர்களின் இந்த ஐந்தாண்டு கால பலகோடி ரூபாய் திட்டம் தற்போது ஆரம்பகட்ட நிலையில்தான் இருக்கிறது.ஆயினும் இது பெரிதும் பயனுள்ளதாக இருக்கும் என்று கூறுகிறார்கள்.குறிப்பிட்ட விஞ்ஞானிகள் எடின்பர்க்,கேம்பிரிட்ஷ்,ஷெப்பீல்டு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்தவர்கள் இந்த ஆய்வாளர்கள்.


தற்போதைய ஆய்வின் மூலம் குரலால் இயக்கப்படும் கணினி இணையத்தள தேடுபொறிகளுடன் குரலால் கட்டுப்படுத்தப்படும் உபகரணங்களும் உருவாக்கப்படும் என்று கூறப்படுகிறது.வீட்டில் தனியாக இருக்கும் முதியவர்களுக்கு இத்தகைய உபகரணங்கள் உதவியாக இருக்கும்.

கணினிப் பேச்சு ஒரு மின்னணு உபகரணத்தில் இருந்து வருவது போலில்லாமல் இயற்கையாக இருக்குமாறும் பார்த்துக்கொள்ளப் போவதாக ஆய்வாளர்களில் ஒருவரான ஸ்டீவ் ரெனால்ஸ் கூறுகிறார்.வருங்காலத்தில் வீடு,அலுவலகம்,பொழுதுபோக்கு எல்லாவற்றிற்கும் இந்தப் பேசும் தொழில்நுட்பம் முக்கியத்துவம் பெறும் என்கிறார் இவர்.

# விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



## எச்.ஐ.வி. எப்படி எயிட்ஸாக மாறுகிறது?



எச்.ஐ.வி. கிருமி மனிதனின் உடலில் நுழைந்த உடனே சி.டி-4 மற்றும் மேக்ரோபாஜ் நரம்பு செல் போன்ற அணுக்களை அணுகி அவற்றினுள் சென்று விடுகிறது.

இந்த வகை செல்கள்தான் நோய்க் கிருமிகளை அழிக்கும் செல்கள். அவற்றினுள் நுழைந்த எச்.ஐ.வி. கிருமி அவற்றினுள் பல்கிப் பெருகுகின்றது. இத்தகைய பெருக்கம் அதிகமாகும் போது அந்த செல் (நோய்த் தடுப்புச் செல்) வெடித்து அதிலிருந்து இலட்சக் கணக்கான வைரஸ் கிருமிகள் வெளிவருகின்றன. அப்படி வெளிவரும் வைரஸ் கொல்லப்பட்டாலும் சில வைரஸ் கிருமிகள் புதிய செல்களுக்குள் ஊடுருவி விடுகின்றன. இப்படியாக சி.டி-4 செல்களின் எண்ணிக்கை உடம்பில் படிப்படியாகக் குறைந்துவிடுகிறது.

தற்போதைய கணக்குப்படி ஒரு நாளைக்கு எச்.ஐ.வி. பாதிக்கப்பட்டவரின் உடலில் நூறு கோடி வைரஸ் கிருமிகள் உருவாகிக் கொல்லப்படுகின்றன. மற்றும் ஒரு நாளைக்கு ஐந்து முதல் ஆறு விழுக்காடு சி.டி-4 லிம்போசைட்டும் உற்பத்தியாகி அழிகிறது. இவை இரண்டின் அளவை வைத்துந்தான் எச்.ஐ.வி. நோயின் தீவிரத்தை நாம் கண்டறிய முடியும். சி.டி.-4 செல் அளவு உடலில் குறைந்தால் பல நோய்கள் வர வாய்ப்பு உண்டு. அதாவது உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி குறைவதால் பல்வேறு நோய்கள் உண்டாகின்றன. இந்த நிலையே எயிட்ஸ் எனப்படுகிறது.

# அதிசய வேர்



அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் ஒரு வேர் விறுவிறுப்பாக விற்பனையாகிறது. அதன் பெயர் ஜின்ஜெங். இது சீனாவில் உற்பத்தியாகிறது.

இந்த வேரை அரைத்துக் குடிக்கிறாங்கள். மாத்திரை, கேப்ஸ்யூல் ஆக்கி விழுங்குகிறார்கள். தேநீர், கோப்பியில் கலந்து பருகுகிறார்கள். மதுபானத்தில் சேர்த்துக் குடிக்கிறார்கள். சோப்பிலும் சேர்த்து உடம்பில் தேய்த்துக் குளிக்கிறார்கள்.

காரணம், ஜின்செங் ஆண்மைக் குறைவைப் போக்குகிறது. மலேரியா, இஸ்மோரியா, தலைவலி, கேன்சர், சாதாரண ஜலதோஷம் ஆகியவற்றுக்கு நல்ல மருந்தாக உள்ளது.

ஜின்செங் செடி 5 ஆயிரம் ஆண்டுகளாக சீனாவில் வளர்க்கப்படுகிறது.

1948 இல் இளம் ரஷ்ய விஞ்ஞானி ஒருவர் ஜின்செங் வேரை இராணுவ வீரர்களுக்குக் கொடுத்துப் பார்த்தார். உடனே அவர்கள் அதிகமான சுறுசுறுப்பு அடைந்து வேலை செய்தார்கள். அதிலிருந்து ஐரோப்பாவில் ஜின்செங் வேர் பிரபலமாகிவிட்டது.

சமீப ஆண்டுகளில் பல கோடி ரூபாய்க்கு ஜின்செங் வேர்களை அமெரிக்கா வாங்கியுள்ளது.

ஜின்செங்கின் மருத்துவக் குணங்களைப் பூற்றி ஆராய பல சர்வதேச மாநாடுகள் நடைபெற்று வருகின்றன. இருந்தாலும் சீன,கொரிய டாக்டர்கள் ஜின்செங் வேரை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் உடல் ஆரோக்கியமாக இருக்கும் என்று இப்போதே அறுதியிட்டுக் கூறுகிறார்கள். படிப்புத் திறனையும் நினைவாற்றலையும் ஜின்செங் அதிகப்படுத்தி இருப்பதை அவர்கள் சோதனைகள் மூலம் நிலைநாட்டியிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Saturday மெயில் சிறுகதை

# நேற்று இல்லாத மாற்றம்

சி.ரகுபதி



'சீதா! சீக்கிரம்...நேரம் ஆச்சு!' பரபரத்தான் பாலு.

'இதோ வந்துட்டேங்க...' உள்ளிருந்து குரல் வந்ததே தவிர சீதா வரவில்லை.அவள் வெளிவர எப்படியும் பத்து நிமிடம் ஆகும் என அனுமானித்த பாலு கையில் நாவல் ஒன்றை எடுத்துக் கொண்டு சோபாவில் அமர்ந்தான்.

சீதாவுக்கும் அவனுக்கும் கல்யாணம் முடிந்து நான்கே மாதங்கள்தான் ஆகிறது.புது மனைவியுடன் ஷொப்பிங்குக்காக புறப்பட்டுக் கொண்டிருந்தான்.

சரியாய் பணிரெண்டு நிமிடங்கள் கழித்து வெளிவந்த சீதா தேவதையாய் மிளிர்ந்தாள்.

இருவரும் வெளிவந்து கதவை பூட்டிவிட்டு காரை எடுத்துக்கொண்டு நகருக்கு பயணமானார்கள்.மக்கள் சுறுசுறுப்பாய் இயங்கிக்கொண்டிருக்க வாகனங்கள் டிராபிக்கில் சிக்கிக் கொண்டு தவித்துக் கொண்டிருந்தன.

இவர்களின் கார் சிக்னலில் மாட்டிக்கொள்ள அப்பொழுதுதான் சீதா அதை கவனித்தாள்.பாலு பக்கவாட்டு வழியாக அருகில் நின்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளின் பின்னே அமர்ந்திருந்த பெண்ணை ஓரக்கண்ணால் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான்.

சீதாவுக்கு என்னவோ போல் ஆகிவிட்டது.பாலுவின் 'வீக்பொயிண்ட்' இதுதான்.இதை இவளே இரண்டுமுறை கவனித்திருக்கிறாள்.பாலு நல்லவன்தான்.ஆனாலும் அவனுடைய இந்த குணம் அவன் மனதில் திருட்டுத்தனமாக குடிகொண்டிருந்தது.

சீதாவின் முகம் வாடிப் போயிருந்தது.கிளம்பும்போது இருந்த சந்தோஷம் மறைந்து போய் சோகம் குடிகொண்டது அவள் முகத்தில்.

சிக்னல் விளக்கு பச்சைக்கு மாற வண்டி லேசாய் உறுமி விட்டு கிளம்பியது.பாலு விசிலடித்துக்கொண்டே சந்தோசமாய் காரோட்டினான்.

கார் நகரின் பிரதான வீதியில் அமைந்திருந்த அந்த அடுக்குமாடி கொம்ளெக்சின் முன்னே நின்றது.

இருவரும் இறங்கினர். உள்ளே சென்று மாடியில் இருந்த ஸ்டோர்சில் தேவையான பொருட்களை வாங்கினர்.

அப்போதும் சீதா கவனித்தாள்.பாலு அங்கே வேலை செய்யும் பெண்களை இரகசியமாக நோட்டமிட்டுக் கொண்டிருந்தான்.

இருவரும் பொருட்களை வாங்கிக்கொண்டு லிப்டில் இறங்கிக் கொண்டிருந்தார்கள்.லிப்ட் ஐந்தாவது மாடியிலிருந்து நான்காவதில் நின்றது.உள்ளே இரண்டு ஆண்களும் ஒரு பெண்ணும் ஏறினர்.லிப்ட் கீழிறங்க ஆரம்பித்தது.அந்த பெண்ணின் பின்னே சீதா நின்றபடி பாலுவை கவனித்தாள்.அவன் அந்த பெண்ணை அடிக்கடி சீதாவுக்கு தெரியாமல் பார்ப்பதை தொடர்ந்தான்.

லிப்ட் இப்போது இரண்டாவது மாடியில் நின்றவுடன் அந்த இரு ஆண்களும் வெளியேறிவிட்டனர். அவர்கள் வெளியேறியவுடன் அது நிகழ்ந்தது. அந்தப் பெண் பாலுவை திரும்பிப் பார்த்து அவன் கன்னத்தில்...

'பளார்!'

'மிஸ்டர் நானும் ஏறுனதில் இருந்து கவனிக்கிறேன். சும்மா என்னை சீண்டிக்கிட்டே இருக்கியே... பொண்ணுன்னா அவ்வளவு கேவலமா போச்சா உனக்கு' ஆவேசத்தில் கத்தியவள் சுட்டு விரலை நீட்டி எச்சரித்தவளாய் சென்றுவிட்டாள்.

லிப்ட் நகரத் தொடங்கியது. பாலு வாயடைத்துப் போய் நின்றிருந்தான். சீதாவை பார்ப்பதற்கே அவன் மனம் கூசிற்று. லிப்ட் கிரவுண்ட் ப்ளோரை வந்தடைந்ததும் வெளியே வந்தார்கள் இருவரும்.

சீதாவுக்கு மனது வலித்தது. தன் கண் முன்னேயே வேறொரு பெண் தன் கணவனை கைநீட்டி அடித்துவிட்டாளே என்று கலங்கினாள். அதற்கு தான்தானே காரணம் என்று மனம் கூசினாள்.

அவனுடைய குணத்தை திருத்துவதற்காக அவள்தான் அப்பெண்ணின் இடுப்பில் சீண்டினாள். ஆனால் அதை அந்தப் பெண் சீதாவின் கணவன் தான் அப்படிச் செய்தான் என்று எண்ணிக் கொண்டு...

இருவரும் காரில் வந்தமர்ந்தனர்.

காருக்கு எதிரே ஒரு ஜீன்ஸ் தேவதை ரோட்டைக் கடந்து போனாள். பாலு அவளைக் கண்டு கொள்ளவில்லை.

சீதாவுக்கு சந்தோஷமாய் இருந்தது.கணவனிடம் நேர்ந்த மாற்றம்.

கார் ஒரு சின்ன குலுக்கலுடன் கிளம்பியது.

# மனைவி அமைவதெல்லாம்...

பஸ்ஸில் ஏறி அமர்ந்திருந்தாள் அன்பரசி.முகம் பொலிவின்றி எதையோ இழந்தது போல் இருந்தது.அழுது அழுது உள்வாங்கிப் போன கண்கள்.காய்ந்து போன உதடுகள்.

'டிக்கெட்....டிக்கெட்...' கண்டக்டர் அருகில் வந்ததும் கையிலிருந்த பர்ஸை திறந்து காசை எடுத்து நீட்டியவளுக்கு போகவேண்டிய இடத்தின் பெயரை சொல்லக்கூட சக்தி இல்லை.தொண்டை வறட்சியில் வலித்தது.பல இலட்சத்துக்கு சொந்தக்காரியான இவள் ஏன் இப்படி இருக்கிறாள் என்றால் அதற்கும் காரணம் இருந்தது.

இரண்டு நாட்களுக்கு முன் வந்த அந்த போன்கால்.

'ஹலோ அன்பரசி மேடமா?' என்ன மேடம்,எப்படி இருக்கீங்க?என்று நலம் விசாரித்தது ஒரு பெண் குரல்.

யாரென்று தெரியாமல்,குழம்பிய நிலையிலே அன்பரசியும் பதில் தந்தாள்.

'நான் நல்லாயிருக்கேன்..! நீங்க யாரு?' என்று சொல்ல எதிர்முனையில் பலமான சிரிப்பு சத்தம்.

தொடர்ந்து 'நான் யாரா?என்ன பற்றி நீங்க இன்னும் கேள்விப் படலையா?ஊருக்கே தெரிந்த விடயம் உங்களுக்கு மட்டும் தெரியலேன்னா....உண்மையிலே நீங்க பாவம் தான்!நான் உங்க வீட்டுக்காரர் ராஜ்குமாரோட பெண் தோழி.உங்களுக்கு தங்கச்சி முறை...' என்று இளக்கமான அழுத்தமான குரலில் எதிர்முனை துண்டிக்கப்பட்டது.

அன்பரசி அப்படியே ஆடிப்போய்விட்டாள். ஐம்புலன்களும் அடங்கிப்போனது.அழுகை மட்டுமே அப்போது துணையாய் இருந்தது.

சாயந்தரம் கணவர் ராஜ்குமார் அலுவலகம் முடிந்து வந்ததும் அன்பரசியின் வார்த்தைகளும் செயல்களும் வழக்கத்துக்கு மாறாக இருந்தன.பொறுத்துப் பொறுத்து பார்த்து கடைசியில் கை ஓங்கும் அளவுக்குப் போய்விட்டார் ராஜ்குமார். 'ஆமாண்டி அப்படித்தான் வச்சிக்கோயேன்!நான் எவளையோ வச்சிருக்கேன்' என்று அவரும் வார்த்தைகளை எக்குத்தப்பாய் வீச 'வைச்சிக்கோங்க....வேணும்னா கல்யாணம் கட்டிக்கோங்க புள்ளைங்க பெத்துக்கோங்க.நானும் என் புள்ளையும் செத்துருவோம்...' என்று அன்பரசி ஒப்பாரி வைக்க ராஜ்குமார் தலையில் அடித்தபடி சோபாவில் தளர்வாய் சரிந்தார்.இப்போது அன்பரசி பஸ்ஸில் ஏறி அமர்ந்திருப்பதற்கும் இதுதான் காரணம்.

அப்படி ஒருத்தி இருந்தால் நாம விலகிடணும் என்ற எண்ணத்தில்தான் இப்போது கணவரின் அலுவலகம் நோக்கி பஸ் பயணம்.

அலுவலகத்துக்கு இதற்கு முன்பு வந்திருக்கிறாள் என்பதால் நேராக அலுவலர்களின் ஓய்வு அறையை நோக்கிப் போனாள்.சாத்தியிருந்த கதவைத் தட்டுவோமா,வேண்டாமா?என்று யோசித்து நிற்கையிலே சிரிப்பும் கும்மாளமாய் சத்தங்கள் கேட்டன.யாரோ ஏதோ ஜோக் சொல்ல எல்லோரும் 'ஹோ'வென சிரித்தனர். அதைத்தொடர்ந்து அவர்கள் பேச்சில் அன்பரசியின் கணவர் ராஜ்குமார் பெயரும் அடிபட காதை கதவருகே கொண்டு சென்றாள்.தெளிவாய் கேட்டது.

''ஏய்....ராஜ்குமார் சொன்னார், அவர் மனைவிக்கு அவர் மேல் அவ்வளவு நம்பிக்கையாம்.அவரைப்பற்றி யார் என்ன சொன்னாலும் 'எம் புருஷன் பத்தி எனக்கு தெரியும்.அவரு பத்தரமாத்து தங்கம்' என் பார்களாம்.அப்படியா!டெஸ்ட் பண்ணிருவோமா..? என்றால் 'தாராளமா' என்கிறார்.நானும் விடுவதாய் இல்லாமல்,அவரு மனைவிக்கு போன் போட்டு அவரைப்பற்றி இல்லாததையும் பொல்லாததையும் சொன்னேன். ஆனா என்ன ஆச்சரியம்னா.அவங்க கொஞ்சங்கூட கோபப்படாமல் சிரிச்சிக்கிட்டே பேசுறாங்க.உண்மையிலேயே ராஜ்குமார் கொடுத்து வச்சவர்தான் என்பதை பிறகுதான் புரிஞ்சிக்கிட்டேன். பொண்டாட்டி என்றால் இப்படித்தான் இருக்கணும்.நம்மள மாதிரி தொட்டதுக்கு விட்டதுக்கு எல்லாம் குறை சொல்லக்கூடாது'' என்று அந்த வாயாடி பேசி முடித்ததோடு 'நல்ல மனைவி அமைவதெல்லாம்...' என்று ஆரம்பிக்க 'இறைவன் கொடுத்த வரம்....' என்று எல்லோரும் சேர்ந்து முடித்தார்கள்.

அன்பரசி ஆனந்த கண்ணீருடன் அங்கிருந்து நகன்றாள்.கணவரிடம் மனதார மன்னிப்புக் கேட்க,பஸ்ஸுக்கு காத்திராமல் ஆட்டோ பிடித்தாள்.

எம்.தினா

நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்
2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி
Saturday மெயில் சிறுகதை
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைகிற கனவுகள்

ஊரும் உறங்க
உற்றவரும் தூங்க
என் கண்கள் மட்டும்
உறங்க வழியின்றி...
பச்சைப் பசுமை போர்த்த
வயல் வெளியில் நடந்து
கிரவல் பரப்பி வைத்த
ஒழுங்கை முகப்படைந்து
சிறிது தூரம் நடக்க
முச்சந்தி தெரியும்
முத்தையாவும் சின்னப்புவும்
கனக ராசாவும் கூட
ஒன்றாய்க் கூடி(க்)
கதைக்கின்ற அந்த
ஒற்றை கருங்கல்...?
யாரோ தறுதலைப் பொடியள்
புரட்டி விட்டாங்கள் போலை
அங்காலை போனா
மணியத்தாற்றை காணி
தென்னஞ் சோலையது
பார்த்தால் பசி தீரும்
அருகாலை
அப்புறத்தாற்ற காணிக்கு
அப்புற எல்லை தெரியாது
இதுவெல்லாம் கடந்து போனால்
கும்பிட வரம் தருமெங்கள்
குல தெய்வம் கோயில்
எத்தனை பொங்கல்கள்
படையல்கள் கூத்துக்கள்
இரவு பகல் பாராமல்
எல்லாம் நடக்கும்
மண்டை பிளக்குது வெயில்
கோதாரி பின்னேரம்
மழைவரப் போகுதாக்கும்
திடீரெனப் பிடிக்கும்
கள்ளனைப் பிடித்தாற் போல்
வீட்டுக்குப் போறத்துக்கும்
நீண்ட தூரம் நடக்க வேணும்
வீட்டிலையும் ஆளில்லை
போட்டது போட்டபடி
மாடு விட்டுக் கட்ட வேணும்
ஒழுக்குக்கு இயத்து வைக்க வேணும்
உடுப்புகளை எடுக்க வேணும்
இன்னும் என்னவென்று
போனால் தான் தெரியும்
விறகு நனைஞ்சு தென்றால்
நாளைக்குச் சமையல் இல்லை
என்ன இது...?
'டொக் டொக்' என்று
பெரிய சத்தம் கேட்குது
ஓ ... கோதாரி வந்திட்டுது!
என்ன ... நனையவில்லை
ஆ... நித்திரையோ...?
ஓ... என் அகதிமுகாம்
கூரையில் தான் மழைத்துளி
கனவு கண்டுவிட்டேன்
ஊரை; உரிமைகளை ...
பெரிதாக மழையும்
சட்டென்று பெய்யத் தொடங்க
ஏதோ நினைவுகள் எல்லாம்
ஒன்றாய்த் திரண்டு
விழி நீரும் சொரிய
மழை நீருடன் தான் கலந்து
உப்பும் இனிப்பும்
ஒன்றாய் ஓடவே...

**காயத்திரி நெல்லிநாதன்**
**வீரபத்திரர் வீதி,**
**கோப்பாய் தெற்கு,**
**கோப்பாய்.**

## காதல்

சூரியன் உதிக்க மறுத்தாலும்
நான் உன்னை நினைக்க மறக்கவில்லை
பூக்கள் வாட மறுத்தாலும்
சோகத்தில் என் மனம் சில
வேளையில் வாடுகின்றதே
கல்வி பயில வந்தநான்
காதல் பயின்றது ஏன்
நீ என்னை நினைக்காது விட்டாலும்
நான் உன்னை ஒரு போதும்
மறந்தது இல்லை
என் விழி உன்னைப் பார்க்காது
சென்றாலும்
என் மனக் கண்ணில் உன்னைப் பார்க்கின்றேன்

**ப.சரண்ராஜ்**

## உறவுகள் தொடர்கதை

துயரத்தின்
வாசல்களை
தூபமிட்டுச் சென்றது
துன்பத்தின் சாயல்கள்

ஒன்றிப்போன
நினைவுகளும்
கன்றிப்போனது
தனிமைகளின்
தவிப்பில்

பாசத்தின்
பந்தோபஸ்தும்
கூறு...

போட்டுப்போனது
பிரிவின்
பிரக்ஞைகளை
பிரிவின்
சுமைகளும்
உறவை...
வரித்துப்போனது..
உள்ளம் மட்டும்
தத்தெடுத்துக் கொண்டது
ஊமைக்காயத்தின்
நினைவுகளை ...

**க.நாகேஸ்வரா**
**சண்டிலிப்பாய்**




## இன்னொரு கண்ணகி...!

பெண்ணென்றால்
இளைத்தவள் என்று
இனியும் எண்ணாதே
பெண் என்பவள்
ஆணினத்திற்கு எவ்வகையிலும்
சளைத்தவளல்ல...!

கணவனை இழந்த
ஆக்ரோசத்தில்
நீதி கேட்டுப்போராடினாள்
அன்றைய கண்ணகி..
கண்ணகியின் வழியில்
நானும் இன்று
நீதி கேட்டுப் புறப்படுகின்றேன்
கணவனை இழந்ததற்காக அல்ல...
நான் கேட்கும் நீதி
அதிகாரம் கொண்ட சில
ஆண்களின் அடக்கு முறைக்கு
எதிராக...

**குறிஞ்சிக் கவி**
**செ.ரவிசாந்**
**வீரமனை, குப்பிளான்**

## சிறகொடிந்த பறவை...

ஆசையாய் தூக்கிவைத்து
நிலாக்காட்டிய
அப்பாவே
அன்று நிலா
அழகாக தெரிந்ததெல்லோ

மடியிலே இருத்தி
பல கதைகள் சொல்லி
மீன்முறியோடு
சோறும் பிசைந்து
ஊட்டி வைத்த
அம்மாவே

ஒரு பாயிலே ஒன்றாய்
படுத்துறங்கி
பள்ளி செல்ல
தலைவாரி விட்ட
அக்காவே

ஒரு அகதிமுகாமிலும்
நீங்கள்
இல்லையே
சீறிவந்த எறிகணைக்கு
இரையாய்
போய் விட்டீர்கள்

வயதிலே
சின்னவள் என்பதால்
'அம்மா,அப்பா
வருவினம்' என
என் மனதை தேற்றுகிறார்
அயல் வீட்டு அக்கா

ஆனால் ....
இத்துயரம்
எனக்கு மட்டுமா
என்னைப் போல
எத்தனை
சிட்டுகள்
சிறகொடிந்து...

**ஆ.முல்லை**
**திவ்யன்**

உங்கள் கவிதைகளும் இப்பகுதியில்
வரவேண்டுமானால்
Saturday மெயில்
இல. 68, எலி ஹவுஸ் வீதி,
கொழும்பு-15
என்னும் முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்...

## விடிவு

எம்
தேசம் வசந்தங்களை
வாசலிலே புதைத்து விட்டு
வன்முறைகளை-பூ
மாலையாய் தலையிலே
சூடியுள்ளது.

எத்தனை உயிர்கள்
எத்தனை உறவுகள்
எம்முன்னே ஸ்தம்பிதமாயிருக்கும்
எம் கண்கள் காணாமலே

கால்கள் இழந்து ஊனமாய்
கணவன் இழந்து விதவையாய்
சுற்றமிழந்து அனாதையாய்
இருப்பிடமிழந்து அகதியாய்-நாம்
விழிகள் காணாமலே
கருகிப்போன கன்னிப்பூக்கள்
எத்தனை பேர்

இதை எண்ணும்போது
கன்னியை காதலிக்க தோன்றவில்லை
கல்லறையை அல்லவா காதலிக்க
தோன்றுகிறது
எப்போது விடிவு கிட்டும்
எம் விழிகள் காண...

**ஜே.வேஜினி**
**இலங்கை இதழியல்**
**கல்லூரி-அச்சுப்பிரிவு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சினிமாவின் வரம் 'தெய்வத் திருமகள்'

வாரா வாரம் வந்து 'கழுத்தறுக்கிற' படங்களுக்கு மத்தியில், வரமாக வந்து மனசை அறுக்கிற படங்களைப் பார்க்கும் போது கொண்டாட்டமாகத்தான் இருக்கிறது. தெய்வத் திருமகள் அந்த வகையில் முதலிடம் . பெறுகிறது.

வளர்ந்த குழந்தையான கிருஷ்ணாவுக்கு, பிறந்த குழந்தையை வளர்க்கிற பொறுப்பு வந்து சேர்கிறது. அதைப் பெற்றதே அவர்தான் என்கிற இடத்தில்தான் 'அதென்னங்க பேத்தல்?' என்ற எண்ணம் வருகிறது. மற்றப்படி கதையில் வெண்ணெயாய் வழுக்கி ஓடுகிறார்கள் கிருஷ்ணாவான விக்ரமும், அவரைச் சுற்றியுள்ள கதாப்பாத்திரங்களும்.

பாடசாலைக்குப் போகிற வரைக்கும் அதை வளர்த்தெடுக்கிற விக்ரமுக்கு, அப்புறமும் வளர்க்க தெரியாது என்பதைச் சொல்லி குழந்தையைப் பிரிக்க அலைகிறது. தாத்தாவின் குடும்பம். இந்த அக்கறையில் கொஞ்சமாவது தனது பெண்ணைக் கண்டுபிடிப்பதில் செலுத்தியிருக்கலாம் அந்தப் பணக்கார அப்பா, சரி கதைக்கு வருவோம்.

குழந்தையையும் உன்னையும் இனி நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று தந்திரமாக விக்ரமை அழைத்து வருகிறது அந்த சதிகார குடும்பம். திடீரென்று நெடுஞ்சாலையில் இறக்கிவிடப்படுகிறார் மனவளர்ச்சி குன்றிய விக்ரம். காரில் குழந்தை தெருவில் இவர். நிலா... நிலா... என்றபடியே தவிக்கும் இவரை எப்படியோ சட்டத்தரணி அனுஷ்காவிடம் கொண்டு வந்து சேர்க்கிறர் ஜூனியர் சட்டத்தரணி சந்தானம். வெயிட்டான கேஸ். காசு கறக்கலாம் என்கிற இவர்களது எண்ணத்தில் விழுகிறது இடி. ஆனால் விக்ரமின் இயலாமையையும் ப்பாசத்தையும் கருத்தில் கொள்கிற அனுஷ்கா, சட்டத்தின் உதவியோடு நிலாவை மீட்டு தருகிறார் விக்ரமுக்கு.

இது போன்ற வேடங்களை அவ்வளவு எளிதாக 'தரவிறக்கம்' செய்துவிட முடியாது. அதற்காக எவ்வளவு தூரம் விக்ரம் உழைத்திருப்பார் என்பதை ஒவ்வொரு காட்சியிலும் உணரமுடிகிறது. ஒவ்வொரு முறை அவரிடம் விசாரிக்கும் போதும் தனது ஊர் பெயரை சிரமத்தோடு சொல்ல ஆரம்பித்து, 'நிலா நிலா... எனக்கு வேணும்' என்று அவர் முடிக்கிற போது துக்கம் தொண்டையை அடைக்கிறது. அவரது நாக்கு, உதடு, விரல்கள், என்று எண்சாண் உடலும் 'ஆட்டிஸம்' என்ற இந்த குறைபாட்டுக்குள் அடங்கிப் போகிறது. இதுபோன்ற குறைபாடுடையவர்கள் எதிலும் நேர்த்தியாக இருப்பார்கள் என்பதற்கு உதாரணம் நீர் கசியும் குழாயை நிறுத்துகிற காட்சியும் சிக்னலில் தனக்கான நேரம் வரும்வரை விக்ரம் காத்திருக்கிற காட்சியும்.

விக்ரமையே விஞ்சுகிறாள் அந்த குட்டிக் குழந்தை சாரா. அவள் நடிப்பை குறிப்பிட்டுச் சொல்ல ஆரம்பித்தால் படத்தில் வரும் எல்லாக் காட்சிகளையும் சொல்லியாக வேண்டும் வேறு வழியில்லை. தமிழ்சினிமா, குழந்தைகளை ஓவர் பேச்சு உலகநாயகிகளாக மட்டுமே காட்டி வந்திருக்கிறது. (இராம.நாராயணன் பட ஷாமிலிகள் மாதிரி) இந்தப் படத்தில் அதையும் பிரேக் பண்ணியிருக்கிறார் விஜய். அம்மா எங்கப்பா?/ சாமிகிட்ட.../ ஏன் சாமிக்கு அம்மாயில்லையா? என்று கேட்கிற குழந்தையை அவ்வளவு யதார்த்தமாக பேச விட்டிருக்கிறார் விஜய். நீதிமன்றத்தில் அத்தனை பேரும் விவாதத்தில் ஈடுபட்டிருக்க, குழந்தையும் அப்பாவும் சைகையாலேயே பேசிக் கொள்கிற காட்சியும்,. சாராவின் நடிப்பும் இது சினிமா என்பதையே மறக்கடிக்கின்றன. இரண்டாம் பாதி முழுக்க நீதிமன்ற காட்சிகள்தான். வாதம், எதிர்வாதம் இரண்டும் சிவாஜியின் கௌரவம் அளவுக்கு சொல்லப்படாமல் இருந்ததே பெரிய ஆறுதல். எதிர்த்தரப்பு வழங்கறிஞரான நாசரை சமாளிக்க முடியாமல் அனுஷ்கா திணறுவதும் ஜூனியரான அனுஷ்காவை சமாளிக்க முடியாமல் நாசர் திணறுவதும் சுவை. இடி இடிக்கும் போது விக்ரம் அனுஷ்காவை கட்டிப்பிடிக்க அவர் சட்டென்று மழைப் பாடலுக்கு போவதிலிருந்தே புரிகிறது வியாபாரிகளின் தொல்லை இந்த படத்தில் எந்தளவுக்கு மூக்கை நுழைத்திருக்கும் என்று.



சில காட்சிகள்தான் ஒதுக்கப் பட்டிருக்கிறது. அமலா பாலுக்கு, அதற்குள் ஏதாவது செய்து நிரூபிக்க வேண்டும் என்ற தவிப்பு தெரிகிறது அந்த முகத்தில்.

சந்தானத்தின் வெகு சாதாரணமான வசனங்கள் நம்மை குலுங்க வைக்கின்றன. பெரிய மியூசிக் டைரக்டரு கையை தூக்கம் பேச மாட்டாரு என்று விக்ரமை வாருவதில் துவங்கி, டீ கோபியே என பம்முவது வரை பின்னி எடுக்கிறார் மனிதர். இரட்டை அர்த்த வசனத்தை மறந்ததற்கு தனி நன்றி. தெற்றுப்பல் எம்.எஸ்.பாஸ்கர், கம்பீர நாசர் ஆகியோரும் கவனிக்க வைக்கிறார்கள். நாசரின் அந்த கடைசிச் சொல்லுக்கு நிசப்தம் வழிய காத்திருக்கும் தியேட்டர் அவர் சொல்லி முடித்ததும் கைதட்டி மகிழ்கிற போதே புரிந்து விடுகிறது இப்படத்தின் வெற்றி.

ஜி.வி.பிரகாஷின் பின்னணி இசை அபாரம். நெடிய காட்சிகளைக் கூட நிமிடத்தில் கடக்க உதவுகிறது அது. ஒரே ஒரு ஊர்ல ஒரே ஒரு ராஜாவாம் பாடலும் அது படமாக்கப்பட்ட விதமும் குழந்தைகள் ராஜ்ஜியத்தை ஒரு உலுக்கு உலுக்கி எடுக்கும். நீரவ்ஷாவின் ஒளிப்பதிவு காட்சிகளின் ஈரத்தையும் வெப்பத்தையும் எளிதாக உணர்த்துகிறது.

பல காட்சிகளில் நம்மையறியாமல் கண்கலங்க வைக்கிற இயக்குநர் விஜய்யை பாராட்டுவது ஒன்றே தர்மம். அதுவும் ஒரே மாதிரி கதைகளை வேறு வேறு நடிகர்களை வைத்துக் கொண்டு 'பிலிம் காட்டும்' இயக்குநர்கள் விஜய்யை மூன்று முறை சுற்றி வந்து வணங்கினால் பாவம் போக்கிக் கொள்ளலாம்.

விருதையே விருந்தாக நினைக்கும் வழக்கம் இயக்குநர் விஜய்க்கு இருக்குமானால், இலையை விரித்து வையுங்கள் கொள்ளாத விருந்து காத்திருக்கிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 2000 ஆவது டெஸ்ட் போட்டி

உலக டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 2000 ஆவது போட்டி நடைபெறுகிறது. இந்திய, இங்கிலாந்து அணிகளிடையிலான இந்தப்போட்டி உலகம் முழுவதும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

கிரிக்கெட் விளையாட்டில் மிகவும் நீண்ட போட்டி என்பது டெஸ்ட் கிரிக்கெட் மட்டும்தான். 5 நாட்கள் நடைபெறும் இந்த டெஸ்ட் போட்டியில் விளையாடுவது என்பது ஒவ்வொரு கிரிக்கெட் வீரரின் கனவாகும். தங்களது நாட்டுக்காக ஒரு நாள் போட்டி, ருவென்டி-20 போட்டிகளில் விளையாடுவதை விட டெஸ்ட் போட்டியில் விளையாடத்தான் ஒவ்வொரு வீரரும் விரும்புவர்.



1877 இல் முதல் போட்டி: டெஸ்ட் போட்டிகள் தொடங்கிய வரலாற்றை அறிய 1877 ஆம் ஆண்டுக்குப் போகவேண்டும். முதல் அங்கீகரிக்கப்பட்ட டெஸ்ட் போட்டி இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையே அந்த ஆண்டு மார்ச் 15 ஆம் திகதி தொடங்கியது. மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில் நடந்த அந்தப்போட்டியில் இங்கிலாந்து அணி தோல்வியத் தழுவியது. அவுஸ்திரேலியா 45 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அடுத்து நடந்த 2 ஆவது போட்டியில் இங்கிலாந்து வெற்றிபெற்று, இரண்டு போட்டிகள் கொண்ட அந்த முதலாவது சர்வதேச டெஸ்ட் தொடர் சமனில் முடிந்தது. சர்வதேச அளவில் நடந்த முதல் அங்கீகரிக்கப்பட்ட டெஸ்ட்போட்டித் தொடராக இது இருந்தாலும், சர்வதேச அளவில் நடந்த முதல் கிரிக்கெட் போட்டி என்ற பெருமை, 1844 ஆம் ஆண்டு செப்டெம்பர் 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் கனடாவுக்கும், அமெரிக்காவுக்குமிடையே நடந்த போட்டிக்கே உண்டு.

டெஸ்ட் போட்டிகளை எல்லா நாடுகளும் விளையாட முடியாது. ஐ.சி.சி. எனப்படும் சர்வதேச கிரிக்கெட் சபை, டெஸ்ட் கிரிக்கெட் ஆடும் அந்தஸ்தைப் பெற்ற அணிகள் மட்டுமே டெஸ்ட்போட்டிகளில் ஆட முடியும். 10 டெஸ்ட் அணிகள்: டெஸ்ட் போட்டிகள் தோன்றி 100 ஆண்டுகள் ஆனதைக் கௌரவிக்கும் வகையில் 1977 ஆம் ஆண்டு மார்ச் 12 முதல் 17 ஆம் திகதிவரை மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில், இங்கிலாந்து, அவுஸ்திரேலியா இடையே ஒரு டெஸ்ட் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் அவுஸ்திரேலியா 45 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது. உலகின் முதல் டெஸ்ட் போட்டியிலும் அவுஸ்திரேலியா இதே வித்தியாசத்தில் தான் வென்றது என்பது சுவரஸ்யமானது.

முதல் தர கிரிக்கெட் போட்டிகளில் டெஸ்ட் போட்டிகள்தான் முதன்மையானதாகும். தேசிய அளவிலான அணிகளுக்கு இடையே நடைபெறும் இந்தப்போட்டிகளை தற்போது 10 அணிகள் ஆடி வருகின்றன. டெஸ்ட் கிரிக்கெட் அணிகள் வரிசையில் முதலாவதாக இணைந்த அணிகள் இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா, 2 ஆவதாக 1889 ஆம் ஆண்டு தென்னாபிரிக்கா இணைந்தது. 3 ஆவது அணியாக மேற்கு இந்தயத் தீவுகள் அணி 1928 ஆம் ஆண்டு இணைந்தது.

4 ஆவது அணியாக நியூஸிலாந்து 1930 ஆம் ஆண்டும், 5 ஆவதாக இந்தியா 1932 ஆம் ஆண்டும் சேர்ந்தன. 6 ஆவது அணியாக பாகிஸ்தான் 1952 ஆம் ஆண்டும், 7 ஆவது அணியாக 1982 ஆம் ஆண்டு இலங்கையும், 8 ஆவது அணியாக சிம்பாப்வே 1992 ஆம் ஆண்டும் இணைந்தன.

9 ஆவது அணியாக இணைந்தது பங்களாதேஷ், 2000 ஆவது ஆண்டு முதல் இது டெஸ்ட் போட்டிகளில் ஆடி வருகிறது.

ஆரம்ப காலத்தில் டெஸ்ட்போட்டிகளில் யார் வேண்டுமானாலும் என்ற நிலை இருந்தது. பின்னர் ஐ.சி.சி. அதை மாற்றி தேசிய அணிகளுக்கிடையே மட்டும்தான் டெஸ்ட் போட்டிகள் நடத்தப்பட வேண்டுமென்று நிர்ணயித்தது.

முன்பெல்லாம் டெஸ்ட் போட்டிகள் மட்டுமே ஆடப்பட்டு வந்தது. ஆனால் ஒரு நாள் போட்டிகள் வந்த பிறகு டெஸ்ட் போட்டிகள் மீதான இரசிகர்களின் ஆர்வம் குறைந்தது. இதனால் தற்போது கிரிக்கெட் தொடரில் பங்கேற்கும் அணிகள் 3 முதல் 5 டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே ஆடுகின்றன.

**ஆஷஸ் தொடர்:**

உலகள்வில் புகழ் பெற்ற டெஸ்ட் தொடர் என்றால் அது ஆஷஸ் தொடர் தான். எப்படி இந்தியா, பாகிஸ்தான் இடையிலான கிரிக்கெட் போட்டிகள் இரு நாடுகளிலும் அக்னியைப் பரப்புகிறதோ அதேபோலத்தான் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா இடையிலான கிரிக்கெட் போட்டிகளும்.

இரு அணிகளும் சேர்ந்து 1877 ஆம் ஆண்டு கிரிக்கெட் போட்டிகளை அதிகாரபூர்வமாக தொடங்கி வைத்த போதிலும், 1882 முதல் தான் இரு அணிகளுக்கிடையிலான போட்டிகளும் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக மாறத் தொடங்கின.

அந்த ஆண்டு லண்டன் ஓவல் மைதானத்தில் நடந்த ஒரே ஒரு டெஸ்ட் போட்டியில் இரு அணிகளும் மோதின. அப்போட்டியில் முதல் இனிங்ஸில் அவுஸ்திரேலியா வெறும் 63 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. அடுத்து ஆடிய இங்கிலாந்து தனது முதல் இனிங்ஸில் 101 ஓட்டங்களை எடுத்தது. பின்னர் 2 ஆவது இனிங்ஸை ஆடிய ஆவுஸ்திரேலிய 122 ஓட்டங்களை எடுத்தது.

இதையடுத்து 85 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் இங்கிலாந்து ஆட வந்தது. ஆனால் அவுஸ்திரேலிய அணியின் அபாரமான பந்து வீச்சால் வெற்றி இலக்கை அடைய 8 ஓட்டங்களே தேவை என்ற நிலையில் இங்கிலாந்து ஆட்டமிழந்தது. கிரிக்கெட் வரலாற்றில் மிகக் குறுகிய வித்தியாசத்தில் ஒரு அணி வென்றது இதுவே முதல் முறையாகும்.

இங்கிலாந்து வெல்லும் என்ற நம்பிக்கையை விட, நமது காலனி நாடான அவுஸ்திரேலியாவை இங்கிலாந்து எப்படியும் வென்று விடும் என்ற பெரும் நம்பிக்கையிலிருந்த இங்கிலாந்து கிரிக்கெட் ரசிகர்கள் அப்படியே உறைந்து போய் விட்டனர். மைதானமே மயான அமைதியில் மூழ்கியது. இருப்பினும் அதிர்ச்சியை அமைதியாக உள்வாங்கிக் கொண்ட இங்கிலாந்து இரசிகர்கள் அவுஸ்திரேலிய வீரர்களை பாராட்டி கைதட்டினர்.

இங்கிலாந்தின் படுதோல்வியை இங்கிலாந்து பத்திரிகைகள் கிழி கிழியென்று கிழித்தெறிந்தன. அதில் படு முக்கியமானது 'தி ஸ்போர்ட்டிங் ரைம்ஸ்' எழுதிய தலையங்கம்தான்.

அதில், ஓவல் மைதானத்தில் இங்கிலாந்து கிரிக்கெட் செத்து விட்டது. அதன் உடல் எரிக்கப்பட்டு ஆஷஸ் அதாவது சாம்பல் அவுஸ்திரேலியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு விட்டது என்று எழுதியிருந்தனர். அதுதான் உலகளவில் அப்போது பரபரப்பாக பேசப்பட்ட சம்பவம். அன்று முதல் இரு அணிகளுக்குமிடையிலான டெஸ்ட் தொடர்களுக்கு ஆஷஸ் தொடர் என்ற பெயரிட்டு விட்டனர்.

ஆஷஸ் தொடர் 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது. ஒரு முறை இங்கிலாந்தில் நடந்தால் முறுமுறை அவுஸ்திரேலியா என மாறிமாறி நடத்தப்பட்டு வருகிறது.

இது வரை நடந்த ஆஷஸ் டெஸ்ட் போட்டிகளில் அவுஸ்திரேலியா அதிகபட்சமாக 123 போட்டிகளிலும் இங்கிலாந்து 100 போட்டிகளிலும் வென்றுள்ளன. 87 போட்டிகள் சமனாகியுள்ளன.

**டெஸ்ட் போட்டி சாதனைகள்:**

அதிக டெஸ்ட் போட்டிகளில் ஆடியுள்ள அணி இங்கிலாந்து, 907 போட்டிகள்.

இந்தியா விளையாடியுள்ள டெஸ்ட் போட்டிகளின் எண்ணிக்கை 447. இதில் வென்றது 108, தோற்றது 139, சமனானது 198.

ஒரு டெஸ்ட் போட்டியில் ஒரு இனிங்ஸில் அதிக ஓட்டங்கள் குவித்த அணி இலங்கை 952-6 டிக்ளேர்.

ஒரு இனிங்ஸில் மிகவும் குறைந்த ஓட்டங்கள் எடுத்த அணி நியூஸிலாந்து- 26 ஓட்டங்கள்.

அதிக ஓட்டங்கள் குவித்த சச்சின்: டெஸ்ட் போட்டிகளில் அதிகம் குவித்த வீரர் சச்சின் டெண்டுல்கர்- 14,692 ஓட்டங்கள்.

அதிக துடுப்பாட்ட சராசரியை வைத்திருந்த வீரர் டொன் பிராட்மன்- 99.94.



ஒரு இனிங்ஸில் அதிக ஓட்டங்களைக் குவித்த வீரர் பிரையன் லாரா- 400. டெஸ்ட் போட்டிகளில் அதிக செஞ்சரிகள் அடித்தவர் சச்சின்-51. அதிவேகமாக சதம் அடித்த வீரர் விவியன் ரிச்சர்ட்ஸ் -56 பந்துகளில் சதமடித்தார்.

டெஸ்ட் போட்டிகளில் அதிக முறை இரட்டை சதம் அடித்த வீரர் டொன் பிராட்மன்-12.

அதிக முறை முச்சதம் போட்ட வீரர்கள் லாரா, ஷேவாக், பிராட்மன், கிறிஸ் கெய்ல்- தலா 2 முறை.

அதிக விக்கெட் வீழ்த்திய முரளிதரன்: டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட் வீழ்த்தியவர் முத்தையா முரளிதரன்-800 விக்கெட்கள்.

அதிக முறை 5 விக்கெட் வீழ்த்தியவர் முரளிதரன்-67.

அதிக முறை 10 விக்கெட் வீழ்த்தியவர் முரளிதரன்-22.

ஒரே இனிங்ஸில் அதிக விக்கெட் வீழ்த்தியவர்கள்- ஜிம் லேகர், அனில் கும்ப்ளே தலா 10 விக்கெட்.

டெஸ்ட் போட்டிகளில் அதிக கெட்ச் பிடித்தவர் ராவிட்-202.

அதிக டெஸ்ட் போட்டிகள் விளையாடிய வீரர் சச்சின் -177.

இப்படிப்பட்ட வரலாற்றுச்சிறப்பு மிக்க டெஸ்ட் கிரிக்கெட் தனது 2000 ஆவது போட்டியை இரசிகர்களுக்கு படைத்துவருகிறது. இப்போட்டியில்இந்தியா வெல்லுமா, இங்கிலாந்து வெல்லுமா என்ற எதிர்பார்ப்பும் அநேகமாக உள்ளது. அதை விட முக்கியமாக இந்தப் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் தனது 100 ஆவது சதத்தைப் போடுவாரா என்ற பெரும் எதிர்பார்ப்பு கிரிக்கெட் இரசிகர்களிடமுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முதலிடத்திற்கு சோதனை

லோர்ட்ஸ் மைதானத்தில் இந்திய,இங்கிலாந்து அணிகளுக்கிடையே முதல் டெஸ்ட்போட்டி நடைபெறுகிறது.இந்தத் தொடரை இங்கிலாந்து 2-0 என்று கைப்பற்றினால் இந்தியாவையும் தென்னாபிரிக்காவையும் பின்னுக்குத் தள்ளி இங்கிலாந்து முதன் முறையாக டெஸ்ட் தரநிலையில் முதலிடம் பிடிக்கும்.

இந்த டெஸ்ட் போட்டி 2000 ஆவது டெஸ்ட் போட்டி என்பதும் சச்சின் தனது 100 ஆவது சர்வதேசசதத்தை எடுப்பாரா என்பதும் ரசிகர்களின் ஆவலைத் தூண்டியுள்ளது. இந்தியா வெற்றி பெற்றாலோ அல்லது தொடரை இந்தியா 0-1 என்று இழந்தாலோ அதன் முதலிடம் பாதிக்கப்படாது.ஊடகங்கள் இந்த டெஸ்ட் தொடரை முதலிடத்திற்கான போராட்டமாகவே சித்திரித்து வருகின்றன.குறிப்பாக இங்கிலாந்து ஊடகங்கள்.

கடந்த முறை 2007 ஆம் ஆண்டு ராகுல் ராவிட் தலைமையில் இந்தியா இங்கிலாந்தில் பயணம் மேற்கொண்ட போது சகிர் கான், ஆர்.பி.சிங்,ஸ்ரீசாந்த் கும்ளே ஆகியோரது அபரா பந்து வீச்சின் மூலம் டெஸ்ட் தொடரை 1-0 என்று இந்தியா கைப்பற்றியது.

அப்போதைய இங்கிலாந்து அணி அந்தப் புதிய தலைமுறை வீச்சாளர்களைப் பற்றி அலட்சிய மனோபாவம் கொண்டதாலும் சகீர்.ஆர்.பி.சிங் ஆகியோரின் பந்து வீச்சும் ஸ்ரீசாந்தின் துல்லியமும் கும்ளேயின் சிக்கனமும் இங்கிலாந்தை எழும்பவிடாமல் செய்தன.

அந்தத் தொடரில் முக்கியமாக செவாக் இல்லாமலே இந்தியா டெஸ்ட் தொடரை வென்றது.தினேஷ் கார்த்திக்,வாசிம் ஜாபா இந்திய அணிக்குத் தேவையான தொடக்கத்தைக் கொடுத்தனர்.

ஆனால்,அந்தத் தொடரில் இந்தியாவுக்கு அடித்த பெரிய அதிர்ஷ்டம்,லோர்ட்ஸில் நடைபெற்ற முதல் டெஸ்ட் ஆகும்.கடைசி நாளன்று இந்தியா 9 விக்கெட்டுகளை இழந்து தோல்வியடையும் நிலையில்மழைபிடித்துக்கொண்டு ஆட்டம் நிறுத்தப்பட்டு டெஸ்ட் போட்டி டிரா ஆனது.தோனி 76 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காதிருந்தார்.அவருக்கு ஒரு முக்கியமான கேட்ச் ஒன்று கோட்டை விடப்பட்டது.ஸ்ரீசாந்த் துடுப்பெடுத்தாடும் போது ஒரு எல்.பி.டபிள்யூ கொடுக்கப்படவில்லை.இதனால் இந்தியா தப்பிப் பிழைத்தது.

3 ஆவது டெஸ்ட் போட்டியில் ஒன்றரை நாள் கால அவகாசமிருந்தும் சுமார் 300 ஓட்டங்கள் முன்னிலை பெற்றிருந்தும் கப்டன் ராவிட் பாலோ ஒன் கொடுக்க மறுத்து ஆட்டம் ட்ராவில் முடிந்தது.இப்போது மேற்கிந்திய தீவுகளில் தோனி கடைசி 15 ஒவர்களை தியாகம் செய்தது போல் ராவிட் அப்போது கைமேலிருந்த வெற்றியை வேண்டுமென்றே பறிகொடுத்து டெஸ்ட் போட்டியை மாற்றினார்.

இந்த முறை இதுபோன்ற தவறுகளைச் செய்தால் இந்திய அணி தன் முதலிடத்தை இழப்பதைத் தவிர வேறு வழியில்லை.ஸ்ட்ராசின் தலைமையின் கீழ் இங்கிலாந்து அணி தற்போது எழுச்சி கண்டுள்ளது.துடுப்பாட்டத்தில் ஸ்ட்ராஸின் முக்கிய பங்களிப்புடன் அலிஸ்டர் குக்கின் புதிய தொடக்க அவதாரமும் இந்திய அணிக்கு பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

அதேபோல் ஜோனாதன் டிராட் ஆடிவரும் ஆட்டம் இந்தியாவுக்குப் பெரிய தலைவலியாகப்போய் முடியுமென்றும் எதிர்பார்க்கலாம்.இயன் பெல்,பீற்றர்சன் என்று துடுப்பாட்டம் பலமாக உள்ளது.

பந்து வீச்சில் அண்டர்சன், டிரெம்லெட் அபாயக்கூட்டணி வகுக்க,கிரகாம் ஸ்வான் ஒரிரு நடுவரிசை விக்கெட்டுகளை சாய்த்தால் இந்திய அணி தோல்வியின் விளிம்பிற்குச் செல்வது உறுதி.இது தவிர டிம் பிரெஸ்னன் விளையாடினால் இந்தியாவுக்கு மேலும் தொல்லைதான்.

இந்திய அணியைப் பொறுத்தவரை தொடக்கம் பலவீனமாக உள்ளது.மிகுந்த அனுபவமற்றவர்.ஆனால்,தைரியமானவர். கம்பீர் காயத்திலிருந்து வந்துள்ளார். எனவே இவர்கள் இருவரையும் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

பார்த்தீவ் படேல் சிறந்த ஹுக் மற்றும் புல்ஷொட் வீரர் அவரைத் தொடக்கத்தில் களமிறக்கி ஜேம்ஸ் அண்டர்சன்,டிரெம்லெட் ஆகியோரை அடித்து விளையாடச்செய்து ஓரளவுக்கு இங்கிலாந்தின் திட்டங்களை அச்சுறுத்தலாம்.

இல்லையெனில் யுவராஜ் எப்படியும் இந்திய அணியில் இடம்பெறுவார் எனும் பட்சத்தில் ஒரு அதிரடி உத்தியாக யுவராஜ் சிங்கை கம்பீருடன் களமிறக்கிப் பார்க்கலாம்.வந்தால் மலை. கங்குலி அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இந்த முயற்சியை சென்னையில் செய்தார்.ஆனால் மழை காரணமாக 5 ஆம் நாள் ஆட்டம் நடைபெறாமல் போனது.

மற்றபடி இந்தியாவின் நடுக்களம் ராவிட்,சச்சின்,லஷ்மண்,தோனி,ரெய்னா என்று பலமாக உள்ளது.போதாதற்கு ஹர்பஜன் சிங்கின் துடுப்பாட்டமும் பலம் சேர்க்கிறது.

பந்து வீச்சில் இந்தியாவுக்கு இந்த முறை இஷாந்த் ஷர்மா வந்துள்ளது இங்கிலாந்துக்கு பெரும் சவால் காத்திருக்கிறது என்று நினைக்க வைக்கிறது. அவர் டெனிஸ் லில்லி போல்வீசி வருகிறார்.அதனால் இங்கிலாந்து சகீர்கான்,இஷாந்த் கூட்டணி முன் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது.

மூன்றாவது வீச்சாளராக பிரவீண் குமாரைச் சேர்ப்பது சிறந்தது.ஏனெனில் ஸ்ரீசாந்த் பயிற்சி ஆட்டத்தில் தாக்கம் ஏற்படுத்தவில்லை.பிரவீண் குமாரின் இரு புறம் ஸ்விங் செய்யும் திறமை புதிய பந்தில் கைகொடுக்கலாம்.இவர் குக்கையோ,ஸ்ட்ராஸையோ தொடக்கத்தில் வீழ்த்தினால் இங்கிலாந்து நிச்சயம் பின்னடைவு காணும்.

நடுக்கள வீரர்களில் பீற்றர்சன், பெல்,மோர்கன் இருந்தால் அவர்களை வீழ்த்த ஹர்பஜன் சிங் திட்டமிடல் செய்வது அவசியம்.

முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் ஆட்டக்களம் வேகப்பந்து வீச்சிற்கு சாதகமாக அமையலாம். இதனால் இந்தியா 4 வேகப்பந்து வீச்சாளர்கள் ஹர்பஜன் ஆகியோருடன் களமிளங்கலாம்.அதாவது கம்பீர்,யுவராஜ், முகுந்த் படேல் ,ராவிட், சச்சின்,லஷ்மண்,ரெய்னா,தோனி,ஹர்பஜன்,சகீர்கான்,இஷாந்த்,பிரவீண் குமார் என்ற அணியை விட ஹர்பஜனை உட்கார வைத்துவிட்டு ஸ்ரீசாந்தை களமிறக்கிப் பார்க்கலாம்.

ஆனால் தோனி அவ்வாறு செய்யமாட்டார்.3 வேகப்பந்து வீச்சாளர் ஒரு ஸ்பின்னர் என்பது உறுதியான அணியாகவே இருக்குமென்று எதிர்பார்க்கலாம்.

இந்த முறை இந்திய அணி ஆர்.பி.சிங்கின் பந்து வீச்சை இழந்துள்ளது.செவாக்கின் அதிரடித் தொடக்கத்தை இழந்துள்ளது. இதனால் இந்திய அணிக்கு இங்கிலாந்தை ஒப்பு நோக்குகையில் சற்றே பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

ஆனாலும் பயிற்சியாளர் பிளெட்சர் இந்த இங்கிலாந்து அணி வீரர்களுடன் நெருங்கிப் பழகியுள்ளதால் அவரது அறிவுரை இந்தியாவுக்குப் பக்கபலமாக இருக்குமென்று எதிர்பார்க்கலாம்.

ஆட்டத்தை டிரா செய்யும் எண்ணத்தை விடுத்து தொடக்கம் முதலே ஆக்ரோஷத்தைக் காட்டினால் இங்கிலாந்து திணறும் என்பது உறுதி.

தோனியின் தலைமையில் இந்திய அணிக்கு ஏற்பட்டுள்ள மிகப்பெரிய சவாலே இந்தத் தொடர்.இந்தப் பரீட்சையில் தோனி தேறுவாரா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஊடக வரலாற்றில் ஓர் கறைபடிந்த அத்தியாயம்




உலகளாவிய ரீதியில் கோலோச்சி வந்த ஒரு ஊடக சாம்ராஜ்யம் இன்று மக்கள் தன்மீது வைத்திருந்த நம்பிக்கைகள் அனைத்தையும் தொலைத்த நிலையில் செய்வதறியாது திகைத்து நிற்கிறது.

அவுஸ்திரேலியாவில் தொடங்கி ஐரோப்பா,அமெரிக்கா, ஆசியா எனத் தனது தடங்களைப் பதித்து வந்த மிகப்பெரும் ஊடக நிறுவனமொன்றின் செயற்பாடுகள் உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளன.

'நியூஸ் கோர்ப்பரேஷன்' என்னும் ஒரு குடையின் கீழ் ஒவ்வொரு நாடுகளிலும் வெவ்வேறுபட்ட நிறுவனங்களின் பேரில் ஒரு பரந்துபட்ட ஊடக சாம்ராஜ்யத்தை நிறுவி அதன் சக்கரவர்த்தியாக கோலோச்சி வந்தவர் அவுஸ்திரேலிய அமெரிக்கரான ரூபர்ட் மேர்டொக்.

இவரது சாம்ராஜ்யத்தின் பிரட்டிஷ் கிளையான நியூஸ் இன்டர் நஷனலின் கீழ் இயங்கி வந்த நியூஸ் ஒவ் த வேர்ள்ட் என்னும் முன்னணி வாராந்தப் பத்திரிகையே இன்று உலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள சர்ச்சைகளின் மையப்புள்ளியாகும்.

போரில் உயிரிழந்த இராணுவ வீரர்களின் குடும்பத்தவர்கள், அரசியல்வாதிகள்,முக்கியஸ்தர்கள் மற்றும் பிரபலங்களின் தொலைபேசி உரையாடல்களை ஒற்றுக்கேட்டதன் மூலம் நியூஸ் ஒவ் த வேர்ள்ட்டின் செய்தியாளர்கள் பரபரப்பாக செய்திகளை வெளியிட்டு வந்தமையே இன்று மெர்டோக்கின் ஊடக சாம்ராஜ்யத்தின் இருப்பையே கேள்விக்குறியாக்கியுள்ளது.

அர்ப்பணிப்பு மிக்கதும் சவால் மிகுந்ததுமான ஊடகத்துறைக்கே களங்கத்தை ஏற்படுத்தும் இவ்வாறான செயல் சகல மட்டத்தினரையும் கொதிப்படைய வைத்துள்ளது.

இந்த ஒற்றுக்கேட்டல் விவகாரம் கடந்த செப்டம்பரிலேயே வெளிச்சத்திற்கு வந்தபோதும் இம்மாத முற்பகுதியிலேயே இது பூதாகரமான சர்ச்சையாக உருவெடுத்துள்ளது.

தமது தொலைபேசி உரையாடல்கள் ஒற்றுக்கேட்கப்பட்டமையால் பாதிக்கப்பட்டவர்கள் 'நியூஸ் ஒவ் த வேர்ள்ட்' பத்திரிகை மீதான விசாரணைக்கு அரசுக்கு அழுத்தம் கொடுக்க ஆரம்பித்தனர்.

அழுத்தங்கள் அதிகரிக்கவே வேறு வழியின்றி இப்பத்திரிகைக்கு எதிரான விசாரணைக்கு பிரதமர் டேவிட் கமரூன் உத்தரவிட்டார்.

இந்நிலையில், இச்சர்ச்சை தனது ஏனைய நிறுவனங்களுக்குப் பரவுவதைத் தடுக்கும் முகமாக நியூஸ் ஒவ் த வேர்ள்ட் பத்திரிகையை மூடுவதென்ற அதிரடித் தீர்மானத்தை மேர்டொக் எடுத்தார்.

1843 ஆம் ஆண்டிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் இப்பழம்பெரும் பத்திரிகையின் உரிமை 1969 இல் மேர்டொக் வசமானது.

உலகிலேயே அதிக இலட்சம் பிரதிகள் விற்பனையாகும் முன்னணிப் பத்திரிகைகளில் ஒன்றான 168 வருட வரலாற்றைக் கொண்ட இப்பத்திரிகையை மூடுவதற்கான திடீர் தீர்மானம் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாகியிருந்தது.

இதன் பிரகாரம் கடந்த 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பதிப்புடன் நியூஸ் ஒவ் த வேர்ள்ட்டிற்கு மூடுவிழா நடத்தப்பட்டதுடன், அதன் நூற்றுக்கணக்கான பணியாளர்களும் அலுவலகத்தை விட்டுக் கதறியழுதபடி வெளியேறியிருந்தனர்.

ஆனால், நியூஸ் ஒவ் த வேர்ள்ட் பத்திரிகையை மூடிவிடுவதன் மூலம் இச்சர்ச்சையை முடிவுக்குக் கொண்டு வந்துவிடலாமென்ற மேர்டொக்கின் திட்டம் தற்போது முற்றிலும் பொய்த்துப் போயுள்ளது.

இச்சர்ச்சை குறித்து நாளாந்தம் வெளிவந்து கொண்டிருக்கும் தகவல் மேர்டொக்கின் முழு ஊடக வலையமைப்பையுமே ஆட்டம் காண வைத்துள்ளதுடன், மேர்டொக்கின் ஊடக அதிகாரிகளுக்கும் பொலிஸ் மற்றும் அரச தரப்புக்குமிடையில் நிலவி வந்த நெருக்கத்தையும் அம்பலமாக்கி வருகிறது. கடந்த செப்டெம்பரில் நியூயோர்க் ரைம்ஸினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையொன்றின்போது தொலைபேசி உரையாடல்கள் ஒற்றுக்கேட்கப்பட்டு செய்திகள் வெளியிடப்படுவதை முதன் முதலாக அம்பலமாக்கிய 'நியூஸ் ஒவ் த வேர்ள்ட்'டின் முன்னாள் செய்தியாளர் சீன் ஹொரே அவரது வீட்டில் சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

இப்பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் அன்டி கூல்சனின் அனுமதியுடனேயே உரையாடல்கள் ஒற்றுக்கேட்கப்பட்டதாக ஹொரே தெரிவித்திருந்த நிலையில் இம்மாத முற்பகுதியில் அன்டி கூல்சன் கைதுசெய்யப்பட்டார்

இவ் அன்டி கூல்சனே பின்னர் ஆசிரியர் பதவியை இராஜிநாமாச் செய்துவிட்டுப் பிரதமர் டேவிட் கமரூனின் ஊடகத் தலைமையதிகாரியாகப் பணியாற்றியிருந்தமை கமரூனுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது.

இச்சர்ச்சை ஆரம்பமானதன் பின்னர் கடந்த ஜனவரியில் கமரூனின் ஊடக தலைமையதிகாரி என்ற பதவியிலிருந்து கூல்சன் விலகியுள்ளபோதும் கமரூனுக்கும் கூல்சனுக்குமிடையிலான நெருக்கம் குறித்து எதிர்க்கட்சிகள் விமர்சித்து வருகின்றன.

இதேவேளை, ஒற்றுக்கேட்டல் விவகாரத்தில் பொலிஸாருக்கு இலஞ்சம் கொடுத்ததன் மூலம் அவர்களிடமிருந்து அனுசரணையைப் பெற்றுக்கொண்டதாக உயிரிழப்பதற்கு சில நாட்களுக்கு முன்னர் ஹொரே தெரிவித்திருந்தமை பொலிஸ் வட்டாரங்களை ஆட்டம் காண வைத்தது.

இதனைத் தொடர்ந்து எழுந்த குற்றச்சாட்டுகளால் லண்டன் மாநகரப் பொலிஸ் ஆணையாளர் போல் ஸ்ரீபன்சன் மற்றும் உதவி ஆணையாளர் ஜோன் ஜேற்ஸ் ஆகியோர் பதவி விலகியுள்ளனர்.

இந்நிலையில், ரூபர்ட் மேர்டொக், அவரது மகன் ஜேம்ஸ் மேர்டோக் மற்றும் மேர்டொக்கின் பிரிட்டிஷ் நிறுவனமான 'நியூஸ் இன்டர் நஷனலின்' தலைமை நிறைவேற்று அதிகாரி றெபேக்கா புரூக்ஸ் ஆகியோர் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் ஊடக விவகாரக் குழுவினால் கடுமையாக விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

முதலில் இவ்விசாரணைகளுக்குச் சமுகமளிக்க மறுத்த மேர்டொக், பின்னர் அதிகரித்த அழுத்தங்களின் காரணமாக விசாரணைக்கு ஆஜரானதுடன் ஒற்றுக்கேட்டல் விவகாரம் அம்பலமாகும் வரை தனக்கு இதுபற்றி எதுவும் தெரியாதெனவும் இவ்விவகாரம் இடம்பெற்ற சமயத்தில் நியூஸ் இன்டர் நஷனலின் நிர்வாகத்தைத் தனது மகன் ஜேம்ஸும் புருக்ஸுமே கவனித்துக் கொண்டதாகக் கூறியிருக்கிறார்.

இதேவேளை, அதிக இலாபத்தை ஈட்டித்தரும் பிரிட்டிஷ் ஸ்கை புரோட்காஸ்டிங்கை *(BSKYB)* என்னும் செய்மதித் தொலைக்காட்சிச் சேவையை தன்வசப்படுத்தும் மேர்டொக்கின் திட்டமும் இவ்விவகாரத்தால் கைநழுவிப்போயுள்ளது.

நான்காயிரத்துக்கும் அதிகமான தொலைபேசி உரையாடல்கள் ஒற்றுக்கேட்கப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது. இதில் 2002 இல் கடத்திக் கொலை செய்யப்பட்ட 12 வயதுச் சிறுமியான அமந்தா மில்லி டௌலரின் தொலைபேசி உட்பட ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் பலியான வீரர்களின் குடும்பங்கள் மற்றும் 2005 லண்டன் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களின் தொலைபேசிகளும் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், இவ்விவகாரத்தால் பாதிக்கப்பட்டவர்களிடம் நேரடியாக மன்னிப்புக்கோரி ஏனைய பத்திரிகைகளில் முழுப்பக்க விளம்பரங்களையும் மேர்டொக் வெளியிட்டிருக்கிறார்.

அத்துடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கான சாத்தியங்களும் காணப்படுகிறது.

அனைத்து வட்டாரங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள இவ்விவகாரம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலும் தீவிரமாக எதிரொலித்து வருகிறது.

தேவேளை, அமெரிக்காவில் இயங்கும் மேர்டொக்கின் நிறுவனம் குறித்த விசாரணைகளை மேற்கொள்ளுமாறு அந்நாட்டு காங்கிரஸ் உறுப்பினர்கள் அழைப்பு விடுத்து வருகின்றனர்.

மேலும், அவுஸ்திரேலியாவில் இயங்கும் மேர்டொக்கின் 'நியூஸ் லிமிற்றெட்' டிடம் கடுமையான விசாரணைகளை நடத்த வேண்டிய தேவை எழுந்திருப்பதாக அவுஸ்திரேலியப் பிரதமர் ஜூலியா கிலார்ட் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், மேர்டொக்கின் பிரிட்டிஷ் நிறுவனத்தின் பதிப்புகள் அனைத்தையும் முடிவுக்குக் கொண்டு வருமாறு அந்நாட்டு எதிர்க்கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

இவ்வாறாகப் பல தரப்புகளிலிருந்தும் அழுத்தங்களை எதிர்கொண்டுள்ள மேர்டொக் தனது இராச்சியத்தைத் தொடர்ந்தும் தக்கவைப்பாரா என்பதே இன்று அனைவர் மத்தியிலும் தோன்றியுள்ள கேள்வியாகும்.

நாளாந்தம் வெளிவரும் புதிய புதிய தகவல்களால் மேர்டொக்கின் ஊடகக் குடும்பத்திற்கு மேலும் மேலும் நெருக்கடி அதிகரித்துச் செல்கிறது.

இந்நிலையில், இது குறித்த விசாரணைகள், அது தொடர்பான அறிக்கைகள் மற்றும் பாராளுமன்றத்தின் இறுதித் தீர்மானம் என இவ்விவகாரம் சர்வதேச அரங்கிலிருந்து ஓய்வுபெறுவதற்கு இன்னும் பல நாட்கள் எடுக்குமெனக் கருதப்படுகிறது.

விசாரணை அறிக்கைகளும் சட்ட நடவடிக்கைகளும் மேர்டொக்கை எப்படித்தான் தண்டித்தாலும் இவ் விவகாரம் ஊடக வரலாற்றில் ஓர் கறைபடிந்த அத்தியாயமாகப் பதிவு செய்யப்பட்டிருப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அஞ்சலி

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் கொழும்பு 15, [illegible] 68 ஆம் இலக்கத்தில் 2011 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org